Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 36

சனிக்கிழமை
01 ஜனவரி 2022

மார்கழி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 20

விலை: 30/=

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
அன்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
உதயனின் இனிய
ஆங்கிலப் புதுவருட
வாழ்த்துக்கள்.

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை காலத்தின் கட்டாயம்!

## இரா. சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 1

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ்–முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவையாகும். இதன் அவசியத்தை உணர்ந்து முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்" –என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

18 ➤



### கொரோனா

| | |
|---|---|
| நேற்று | 499 |
| மொத்தம் | 5,87,245 |

### உயிரிழப்பு

| | |
|---|---|
| நேற்று | 17 |
| மொத்தம் | 14,979 |

தெல்லிப்பழையிலும் -

## போதையில் பணி பொலிஸுக்கு ஆப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், நேற்று அதிரடியாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

அவர், நேற்றுமுன்தினம் மதுபோதையில்

18 ➤

இந்தியாவுக்கு ஆவணம் அனுப்பினாலும் –

## வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் இணைக்கமுடியாது!

*அமைச்சர் தினேஷ் குணவர்த்தன திட்டவட்டம்*



கொழும்பு, ஜன. 1

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை எடுத்துக்காட்டி தமிழ்க் கட்சிகள், இந்தியப்பிரதமருக்கு ஆவணம் அனுப்புவதால் வடக்கு,

18 ➤

## ராஜபக்சக்களை விரட்டுவதற்கு புதுவருடத்தில் ஒன்றுதிரள்க!

*எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு*



கொழும்பு, ஜன. 1

"2022ஆம் ஆண்டு பல எதிர்பார்ப்புக்களுடன் பிறக்கின்றது. இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே ராஜ

18 ➤

## இந்தியா, பாகிஸ்தானிடம் உணவுக்காகப் பேச்சு

கொழும்பு, ஜன. 1

அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தியா மற்றும் பாகிஸ்தானிடம் கடன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் வர்த்தக அமைச்

18 ➤



## இந்திய மீனவர்களுக்கு எதிராக கொட்டும் மழையில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 1

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக, யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதியில் நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வலிகாமம் வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கங்களின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணியளவில் மயிலிட்டி துறைமுகத்

18 ➤

## கோத்தாவுக்கு 'கூ'!

கொழும்பு, ஜன. 1

பால்மா கொள்வனவு செய்வதற்காக மிரிஹானையில் வரிசையில் நின்றிருந்தவர்கள், ஜனாதிபதி

18 ➤

## யாழைச் சேர்ந்த 3 பெண்கள் நீர்வீழ்ச்சியில் மாயம்!

*ஒருவர் சடலமாக மீட்பு*

கொழும்பு, ஜன. 1

ஹங்வெல்ல, தும்மோதர நீர்வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்

18 ➤

## யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்தில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்

18 ➤

## சம்பள அதிகரிப்பு இல்லையேல் 20 லிருந்து மீண்டும் போராட்டம்

**இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 1

"எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் சம்பள அதிகரிப்பு இல்லாவிடின், பெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம்" என்று, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

18 ➤

## வெங்காயம் உ.கிழங்குக்கு வரிக்குறைப்பு

கொழும்பு, ஜன. 1

2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் உருளைகிழங்கு மற்

18 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதுமை மா ரவைக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.குடாநாட்டில் கோதுமை மா மற்றும் ரவைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில வர்த்தக நிலையங்களில் கோதுமை மா கிலோ 150 ரூபாவுக்கும், ரவை கிலோ 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால் புத்தாண்டுக்கான பலகாரம் மற்றும் சிற்றுண்டிகளைத் தயாரிப்பதற்கு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (ஒ-4,17)

# கோத்தாபய பெயரைக் கூறி கப்பல் கொள்வனவு முயற்சி

## விசாரணைகள் தீவிரம்

**கொழும்பு, ஜன.1**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பெயரைப் பயன்படுத்திக் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய முயன்ற கடற்படை முன்னாள் அதிகாரி தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

2.5 மில்லியன் டொலர் பெறுமதியான கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது என்றும், இந்தக் கொடுக்கல் வாங்கலில் முன்னாள் கடற்படை அதிகாரிக்கு மேலதிகமாக வர்த்தகர் ஒருவரும் சட்டத்தரணிகள் பலரும் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் கடிதத் தலைப்பும், அதன் தலைவர் ஒருவரின் கையொப்பமும் போலியாக உருவாக்கப்பட்டுள்ளன என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கப்பல் தற்போது மோதர கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளது என்று கூறப்படும் நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (எ-இ)



## பூநகரிப் பிரதேசசபை தவிசாளர் கடமையேற்பு

யாழ்ப்பாணம். ஜன.1

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சிறீரஞ்சன் நேற்றுத் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

புதிய தவிசாளரை வரவேற்கும் நிகழ்வும் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், தவிசாளரை செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் வரவேற்றனர் .

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், பூநகரி பிரதேச சபையின் உபதவிசாளர் எமிலியாம்பிள்ளை, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் செயலாளர் விஜயன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள், சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-இ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.1

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் ஆதாரம் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி நெல்லை முருகன் மணி மண்டபத்தில் இடம்பெறும்.

மருத்துவமனை பதில் மருத்துவ அத்தியட்சகர் வே.கமலநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-4)



# சின்ன வெங்காய செய்கை அமோகம்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.குடாநாட்டு விவசாயிகள் பெரும்போகத்தில் சின்ன வெங்காயச் செய்கையில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வெங்காயச்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரைக்கும் சுமார் 400 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்னவெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஊரெழு நீர்வேலி, கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், இடைக்காடு, ஈவினை, உரும்பிராய் ஆகிய இடங்களில் பரவலாக வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-4,17)

## உணவகங்கள் மீது திடீர்ப் பரிசோதனை

சாவகச்சேரி,ஜன.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில், சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் நேற்று திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பல உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் இனங்காணப்பட்டன. அவற்றை உடனடியான நிவர்த்தி செய்யுமாறு உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டில் பிரதேசத்தில் உள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் வாராந்தம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,9)

# நிலுவையில் வழக்கு அகற்றப்பட்டது கடை!

## பாதிக்கப்பட்டவர் கவலை

யாழ்ப்பாணம், ஜன. 1

நீதிமன்றங்களில் மூன்று வழக்குகள் உள்ள நிலையில் தனது கடையினை கரைச்சி பிரதேச சபை உடைத்து அகற்றியுள்ளது என்று கிளிநொச்சி பொதுச் சந்தையில் வாழ்வாதாரமாக ஊர்க்கோழிக்கடை வைத்து பல வருடங்களாக வியாபாரம் செய்துவரும் நபர் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது: கரைச்சி பிரதேசசபையில் தற்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ள தரப்பினர் அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்குடன் நடந்துகொள்கின்றனர்.

இவர்கள் அதிகாரத்துக்கு வந்த நாள் முதல் தொடர்ச்சியாக பல்வேறு பழிவாங்கலுக்குள் உள்ளாக்கப்பட்டுவருகின்றேன். எனது வியாபாரத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. இதனை தொடர்ந்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றலில் வழக்குத்தாக்கல் செய்து வழக்கு நடைபெற்று வருகிறது.

ஏற்கனவே கரைச்சி பிரதேச சபையினரால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டபோது அந்தத் தீர்ப்புக்கு எதிராக நான் யாழ் மேல் நீதிமன்றிலும் மேன்முறையீட்டு நீதி மன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்படியொரு நிலையில்தான் எனது வியாபார நிலையம் அகற்றப்பட்டுள்ளது - என்றார். இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் செயலாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த நபர் அனுமதி பெறாது வியாபார நிலையம் அமைத்த காரணத்தால் குறித்த கடையை உடைத்து அகற்றினோம் - என்றார். (ம-214)



# உயிராபத்தில் காட்டுயானை

முல்லைத்தீவு,ஜன.1

குமுழமுனை மேற்கு கரடிப்பூவர் கிராமத்தில், உடல் நிலை பாதிக்கப்பட்ட யானை ஒன்று விவசாயிகள் நிலத்தில் வீழ்ந்துள்ளது.

சுமார் மூன்றரை அகவை கொண்ட குறித்த குட்டியானை வாய்க்காயத்தால் பாதிக்கப்பட்டு உணவு உட்கொள்ள முடியாத நிலையில் வீழ்ந்துள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவர் டி.கிரிதரன் தலைமையிலான குழுவினர் யானைக்குச் சிகிச்சையளித்துள்ளனர்.

யானை தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளது. (ஒ-4,19)

# இருவருக்கு டெங்கு


சாவகச்சேரி,ஜன.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று இருவருக்கு டெங்கும், ஒருவருக்கு உண்ணிக்காய்ச்சலும் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. காய்ச்சல் காரணமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்திருந்தவர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனையில், தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மந்துவில் கிழக்கு மற்றும் தனங்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கு டெங்கும், நுணாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு உண்ணிக் காய்ச்சலும் ஏற்பட்டுள்ளது. (ஒ-4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 45 பேருக்கு ஒமிக்ரோன்



**கொழும்பு,ஜன.1**
**இலங்கையில் இதுவரை ஒமிக்ரோன் தொற்றாளர்கள் 45 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

இந்தத் தகவலை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆரம்பத்தில் ஒமிக்ரோன் தொற்றுடன் 4 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில், தொற்றுச் சந்தேகமுடையவர்களின் மாதிரிகள் தொடர்ச்சியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் அடிப்படையில், 45 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டுள்ளனர். அதே வேளை தற்போது பண்டிகைக் காலமென்பதால், கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உள்ளது என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ஒ-4,இ)



## சூரிய கிரகணத்தால் அரசுக்கு ஆபத்தாம்!

கொழும்பு, ஜன.1
கடந்த 4 ஆம் திகதி நிகழ்ந்த சூரிய கிரகணத்தால், இலங்கை அரசுக்குள் பெரும் நெருக்கடி ஏற்படும் என்றும்,அமைச்சர்கள் மீதான பொது மக்களின் அதிருப்தி அதிகரிக்கும் என்றும் பிரபல ஜோதிடர் கல்யாணி ஹேரத் மெனிகே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஜாதகம் கும்பம் என்றழைக்கப்படும். கும்பம் இலங்கையின் அடையாளம் ஆகும்.

இலங்கை ஜாதகத்தில் இந்த கிரகம் 10 ஆம் வீட்டில் நடைபெறுகின்றது.

10 ஆம் இடம் நாட்டின் தற்போதைய அரசை குறி வைக்கின்றது. தோஜா குணமும், அக்னியுடன் கொண்ட ராகு 4இல் விருச்சிக ராசியில் இருக்கின்றார்

இதன் காரணமாக இலங்கை அரசுக்குள் கடும் நெருக்கடி நிலவும் என 'தெய்வஞான காமதேனுவ' எனும் பழைய புத்தகமான ஜோதிட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் முக்கியமான அதிகாரிகள் மோதிக் கொள்வார்கள். முக்கியமான சக்தி வாய்ந்த வர்த்தக மையங்கள் இலங்கையின் சரிவுக்கு வழிவகுக்கும்.

ஆளும் கட்சியின் மீதான மக்களின் எதிர்பார்ப்புக்கள் குறைந்து வருகின்றமையால் இவை அரசு கவிழ்வதற்குக் காரணமாக அமையும்.

அரசு தனது பலத்தை இழந்து வருகின்றமையால், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடரும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள் மோதல் வெடிக்கும்.

தற்போது நாட்டில் பிரச்சினையாக மாறியுள்ள எரிபொருள் பற்றாக்குறை தொடரும். இதன் காரணமாக அரசு பல சரிவுகளை சந்திக்க வேண்டி வரும்- என்றார்.(எ-இ)

## இந்திய மீனவர்களுக்கு மறியல் நீடிக்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஜன. 1
இந்திய மீனவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் நேற்று உத்தரவிட்டார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 43 பேர் ஆறு விசைப்படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த மாதம் 18ஆம் திகதி குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். மீனவர்களுக்கு எதிரான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காத காரணத்தால் மீனவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டது. (ம-25)




## மதுப்போத்தலுக்கு ஸ்ரிக்கர் கட்டாயம்

கொழும்பு, ஜன.1
இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபானப் போத்தல்களில் பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கட்டாயமாக்கப்படுகின்றது என்று மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)




கிட்டத்தட்ட வல்வெட்டித்துறையில என்ன நடந்திச்சோ அதைமாதிரி ஒரு சம்பவம் தான் காரைநகரிலையும் முந்தநாள் நடந்திருக்கு. அங்க எப்பிடி பட்ஜெட்டில ரண்டு தரம் செல்வேந்திரா வைத் தோற்கடிச்சு ,பதவியிழக்க வைச்சிட்டு, பிறகு உள்ளுக்கால டீல் பேசி அதே செல்வேந்திராவை தவிசாளராக்கிச்சினமோ, அதே கதைதான் மயிலன் அப்புத்துரைக்கும்.

காரைநகர் பிரதேச சபையின்ர தவிசாளரா இருந்தவர் இறந்து போக, மீன் சின்னத்தில சுயேச்சையாக் கேட்டு வெண்டவை சார்பில அப்புத்துரை வாக்கெடுப்பில புதுத் தவிசாளராக வந்தார். ஆனால், எப்பிடியும் ஆளை விழுத்தோணும் எண்டு கூட்டமைப்பும், ஐ.தே.கவும் கூட்டுச் சேர்ந்து ரண்டு தரமும் பட்ஜெட்டைத் தோற்கடிக்க, அவரின்ர பதவி பறிபோச்சுது. அதுக்குப் பிறகு கூட்டமைப்பு தங்கட ஒராளைத் தவிசாளராக்க கடுமையா வேலை செய்திச்சுது. ஆனால் சனங்களின்ர கருத்து வேற மாதிரி இருந்திச்சு. வீணாப் பதவிக்கு ஆசைப்பட்டு, சபை நடவடிக்கையை கூட்டமைப்பு குழப்புது எண்ட மாதிரிக் கதையளும் வரத் தொடங்கிட்டுது. இப்பிடிக் கதையள் வந்தால் , பிறகு அடுத்தமுறை எலக்சனில வெல்லுறது எண்டது எட்டாக்கனிதான். அதால சுயேச்சைக்குழுவோட கதைச்சு ஒரு முடிவுக்கு வாறதெண்டு கூட்டமைப்பு தீர்மானிச்சுது.

யாழ்ப்பாணம், மார்ட்டின் றோட்டில இருக்கிற தமிழரசுக் கட்சி அலுவலகத்தில மாவையரின்ர தலைமையில போன புதன்கிழமை பின்னேரம் 5 மணிக்கு ஒரு கூட்டம். சுயேச்சைக்குழுக்காரரும் கலந்து கொண்டிருக்கினம். அதிலதான் காரைநகர் பிரதேச சபையை ஆர் ஆளுறது எண்டு டீல் பேசுப்பட்டிருக்கு. சுயேச்சைக் குழுவுக்கு ஆறுமாசமும், கூட்டமைப்புக்கு ஆறுமாசமும் எண்டு பங்கு பிரிச்சிருக்கினம். ஆனால் "பட்ஜெட்டை தோற்கடிக்க எங்களுக்கு உதவினது முன்னணியில இருந்த பெண் உறுப்பினர் தான். அதால அவாவவை கட்சியில இருந்தே நிப்பாட்டிப் போட்டினம். அவாவுக்கும் தவிசாளர் பதவி குடுக்கோணும்" எண்டு கூட்டமைப்பு சொல்லியிருக்கு. ஆனால் அதுக்கு முதல் சுயேச்சைக் குழு உடன்படேலை. பிறகு கூட்டமைப்பு தன்ர பதவிக்காலத்தில மூண்டு மாசங்களை முன்னணியில இருந்து தெரிவான பெண் உறுப்பினருக்கு குடுக்கிறம் எண்டு சொல்ல, கொஞ்சம் இழுத்தடிச்சு சுயேச்சைக் குழு அதுக்கு ஓமெண்டிருக்கு. அதுக்கு பிறகு ஆர் முதல் மூண்டு மாசங்களும் தவிசாளர் எண்ட பிரச்சினை வந்திட்டுது. முதலில தாங்கள்தான் தவிசாளர் எண்டு கூட்டமைப்பும், சுயேச்சைக் குழுவும் விடாப்பிடியா நிண்டிருக்கினம். பிறகு இதிலையும் கூட்டமைப்புத்தான் இறங்கி வந்து சுயேச்சைக் குழுவே முதலில ஆளட்டும் எண்டு விட்டுக் குடுத்திருக்கு.

அதின்படி இன்னும் மிச்சம் இருக்கிற ஒரு வருசத்தில முதல் மூண்டு மாசங்களும் சுயேச்சைக்குழுவும், அடுத்த மூண்டு மாசங்கள் முன்னணியும்( இப்ப அந்த உறுப்பினர் முன்னணியில இல்லை),அதுக்கடுத்த மூண்டு மாசங்கள் கூட்டமைப்பும், கடைசி மூண்டு மாசங்கள் திரும்பவும் சுயேச்சைக்குழுவும் பிரதேசசபையை ஆள்றது எண்டு முடிவெடுத்து, ஒப்பந்தத்திலையும் கையெழுத்துப் போட்டிருக்கினம். அதுக்குப்பிறகு தான் அடுத்தநாள், ஏகமனதாக சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த அப்புத்துரை தவிசாளரா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். என்ன டீல் எண்டாலும் வையுங்கோ. ஆனால், குழப்பமில்லாமல் ஒற்றுமையா சபையை நடத்தி சனத்துக்கு நல்லது செய்தால் சரி.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 202 பில்லியன் ரூபாவை அச்சிடும் மத்திய வங்கி

**கொழும்பு, ஜன.1**

**இலங்கை மத்திய வங்கி 202 பில்லியன் ரூபாவை அச்சிடுவதற்கு நேற்றுமுன்தினம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**



கடந்த ஒக்ரோபர் மாதத்தின் பின்னர், நேற்றுமுன்தினமே பணம் அச்சிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மட்டும் இலங்கை மத்திய வங்கி 825 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது. அத்துடன், நேற்றுமுன்தினம் இலங்கை மத்திய வங்கி 48.5 பில்லியன் ரூபா பெறுமதியான முறிகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அதில் 33.5 பில்லியன் பெறுமதியான முறிகளையே விற்பனை செய்ய முடிந்துள்ளது. அதேவேளை, வட்டி விகிதம் மற்றும் நாணய மாற்று வீதத்தைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதன் மூலம் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து வருகின்றது என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ.விஜேவர்தன எச்சரித்துள்ளார். (எ-இ)

# புகையிலைப் பாவனை சடுதியாகக் குறைவு

கொழும்பு.ஜன.1

புகையிலைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைவடைந்துள்ளது என்று புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதிகாரசபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ச தெரிவிக்கையில்,

நாட்டில் 2015 ஆம் ஆண்டு 45.7 வீதமாக இருந்த புகையிலைப் பாவனை இன்றைய நிலவரப்படி 36.2 வீதமாகக் குறைந்துள்ளது. தினமும் 60 ஆண்கள் புகையிலை தொடர்பான நோய்களுக்கு ஆளாகின்றனர்.

புகையிலைப் பாவனை அகால மரணங்களுக்கு வழி வகுக்கின்றது. உலகளவில் எட்டு மில்லியன் இறப்புகள் பதிவாகியுள்ளன.

இது கொரோனாத் தொற்று நோயைவிட மிக மோசமானது- என்றார். (ஒ-4.இ)



# கனரக வாகனங்களால் சேதமடையும் வீதிகள்

வவுனியா,ஜன.1

வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் உள்வீதிகளில், கனரக வாகனங்கள் பயணிப்பதால் அவை கடும் சேதமடைந்துள்ளன.

வவுனியா சாந்தசோலையில் இருந்து பூந்தோட்டம் பாடசாலை வரையான வீதி காப்பற் இட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக கனரகவாகனங்களினூடாக கிரவல் மற்றும் ஏனைய பொருள்கள் பெரியார்குளம் மற்றும் பூந்தோட்டம் உள்வீதிகளூடாகக் கொண்டுசெல்லப்படுகின்றன.

இதனால் உள் வீதிகள் சேதமடைந்துள்ளன.

எனவே சிறுவீதிகளூடாக கனரக வாகனங்கள் பயணிப்பதைத் தவிர்த்து, மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,110)



# நினைவுப் பேருரையும் பொருள்கள் கையளிப்பும்

யாழ்ப்பாணம், ஜன.1

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந் தலட்சுமி அருளானந்தத்தின் 2 ஆம் ஆண்டு நினைவுப் பேருரையும் அவரால் சேகரிக்கப்பட்ட அரும்பொருள்கள் கையளிப்பும் நேற்று முன்தினம் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினர். அத்துடன், சிரேஷ்ட உதவி நூலகர் சி.கேதீஸ்வரன் "இணையவழி கூட்டுறவுப் பட்டியலாக்கம் பொதுநூலகங்களுக்கான சாதக நிலைமைகள்" என்ற தலைப்பில் நினைவுரையாற்றினார்.

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் தன்னார்வத்தோடு தனிப்பட சேகரித்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களும், ஏராளமான தமிழரின் தொன்மைசார் மரபுரிமை அரும் பொருள்களும் அவரின் குடும்பத்தால் யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்குக் கையளிக்கப்பட்டன. (ஒ-ரி1)

## நூல் வெளியீடும் பெருமதிப்பளிப்பும்

யாழ்ப்பாணம், ஜன.1

பெரிய சந்நியாசியாரின் 104 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, இறைபணி துலக்கும் ஆன்மீகக்கதைகள், இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவாலய வரலாற்றுப் பதிவுகள் என்ற நூல்களின் வெளியீடு கலாபூஷணம் பண்டிதை வை.கணேசபிள்ளை, ஞானஏந்தல் மா.ந.பரமேஸ்வரன் எம்.ஏ ஆகியோருக்கு பெருமதிப்பளிக்கும் நிகழ்வும் இன்று பி.ப.3 மணிக்கு மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் முன்னிலையில் நடைபெறவுள்ள நிகழ்வில், நூல்களின் வெளியீட்டுரைகளை யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழி முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசனும்,கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் ஆற்றுவார்கள்.

கெ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி வே.பிரேமகுமார், சிவஸ்ரீ குமார.சரவண வக்குருக்கள், ஆன்மீகச்சுடர் தொண்டுநாத சுவாமிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-ரி1)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜன.1

மக்கள் கலைஞர் வயிரமுத்து திவ்வியராஜன் ஆக்கத்தில் உருவான, "இன்னும் கொஞ்சநேரம் இருந்தால் தான் என்ன - ஓர் இதயத்தின் கதை" என்ற நூலின் அறிமுக நிகழ்வு, நாளை பி.ப. 4 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. .(ஒ-ரி1)

# பருவகால பயணச்சீட்டு விநியோகிப்பு தாமதம்

யாழ்ப்பாணம்.ஜன.1

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையால், 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான பருவகால பயணச்சீட்டு இதுவரை விநியோகிக்கப்படவில்லை.

இதனால் அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாதத்தில் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரையான காலப்பகுதியில், பருவகாலப்பயணச்சீட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது.

எனினும் ஜனவரி மாதத்துக்குரிய பயணச்சீட்டு இதுவரை வரை வழங்கப்படவில்லை. இதனால் தினமும் பணம் செலுத்திப் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இ.போ.ச.வினரிடம் கேட்டபோது, எதிர்வரும் ஐந்தாம் திகதி தொடக்கம் பயணக் கட்டண அதிகரிப்பு செய்யப்படவுள்ளது. புதிய கட்டண விவரம் வந்து சேராததால் பருவகால பயணச்சீட்டு விநியோகிக்கப்படவில்லை. என்றனர். (ஒ-4.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

A9. வீதி கைதடியில் வசிக்கும் **ரெங்கநாதன் சுதர்சன்** ஆகிய நான் எனது பெயரை **ரெங்கநாதன் ஹபீனயன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ரெங்கநாதன் ஹபீனயன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**ரெங்கநாதன் ஹபீனயன்**

## வேலையாள் தேவை

இராஜேந்திரா வர்த்தக நிலையத்துக்கு விற்பனையாளர் தேவை

(35 வயதுக்கு மேற்பட்டவர்)

**021 222 7043**

(CS 1285)(3/6)

## மரண அறிவித்தல்

**பிறப்பு** 15 . 04 . 1939



**இறப்பு** 31 . 12 . 2021

### திரு. சின்னையா நாகமணி

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரந்தன் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா நாகமணி அவர்கள் நேற்று (31.12.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற சின்னையா சின்னி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தேவி, சின்னமணி (மணி), தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சகாயநாதன் (நாதன்), ஜீவகுமார் மற்றும் இராசநாயகம் (வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், மு.சே.உ.மாநகர சபை), உதயகுமார் (குஞ்சன்), கீதபொன்கலன் (ஆசிரியர்யா/ சென்ஜெம்ஸ் மகளிர் வித்தியாலயம்), சிவபாலன், குணபாலன், ஜெயபாலன் (ஆடைத் தொழிற்சாலை, கட்டுநாயக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோ, மேரிசசிகலா, புஸ்பமலர், பிறிம்றோஸ் (ஆசிரிய ஆலோசகர், தீவக வலயம்), மதிவதனி, புஸ்பலதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (01.01.2022) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்று புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரந்தன் மேற்கு,**
**நீர்வேலி.**

(CS 1284) (3/6)

**தகவல்:**
**பிள்ளைகள்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### விஸ்வப்பிரம்மஸ்ரீ.சி.இ.பொன்னுத்துரை பத்தர் (SEP)

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடி, கே.கே.எஸ் வீதி, இலக்கம் 674 இனை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இளையதம்பி பொன்னுத்துரை பத்தர் அவர்கள் நேற்று (31.12.2021) வெள்ளிக்கிழமை பி.ப சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற பவளம் அவர்களின் அன்புக் கணவரும், மனோரதி (ஓய்வு பெற்ற பிரத்தியேக உதவியாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம்), காலஞ்சென்ற சூரியதாசன் (ஜேர்மனி), ஜெயரதி (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேராசிரியர்.இ.நந்தகுமரன் (முன்னாள் வவுனியா வளாக முதல்வர், யாழ் பல்கலைக்கழகம்), மாலதி (ஜேர்மனி), தட்சணாமூர்த்தி (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.சந்தோக்ஷ் (பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, பூநகரி), Eng.விவேக் (ஜேர்மனி), அபிக்ஷேக் (ஆசிரியர், சுவிஸ்), Eng.சங்கீத் (சுவிஸ்), பிரியதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), Dr.யாழினி (ஜேர்மனி), நீல்ஸ் (ஜேர்மனி), வித்ரா (சுவிஸ்), ஆகியோரின் பேரனும், பிரியா மயூரா (ஜேர்மனி), யுவதேவ் (ஜேர்மனி), ஆதிரன், தியான் (சுவிஸ்), ஆகியோரின் பூட்டனும், மோகனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான இராசதுரை, கனகம்மா, சின்னத்துரை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கே.கே.எஸ் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகள்:-021 221 6244, 0776953077,**
**0776677840,**
**சுவிஸ் 41783212253, ஜேர்மனி 4915758433498**


**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 1286) (3/6)

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் S.K. தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)



**தோற்றம்**
**01.01.1943**

**மறைவு**
**01.01.2009**

வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம்-அப்பா
இருந்தும் மனம் ஏற்குதில்லை அப்பா
நிஜமாக நீங்கள் மறைந்து
பதின்மூன்று ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம்தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் அப்பா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிரந்தர முகவரி:**
**தன்னை, களபூமி, காரைநகர்,**
**தற்காலிக முகவரி:**
**இல.58, மானிப்பாய் வீதி,**
**ஆறுகால்மடம்,**
**077 183 6625**

உங்கள் நினைவுகளுடன்
என்றும்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிமுறைகளை மீறி அதிபர்கள் நியமனம்

## ஆசிரியர் சங்கம் போர்க்கொடி



கொழும்பு,ஜன.1

**விதிமுறைகளை மீறி அமைச்சரவைப் பத்திரங்களின் ஊடாக அதிபர்களை நியமிக்கும் முறைமைக்கு இலங்கை அரச ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.**

போட்டிப் பரீட்சை நடத்தாமல், நேர்காணல் மூலம் மாத்திரம் அதிபர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான நடைமுறை தொடர்பில், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. போட்டிப்பரீட்சைகள் தனித்துவத்தை வெளிப்படுத்துவதால், போட்டிப் பரீட்சையின்றி நியமனங்கள் வழங்கப்படுமாயின், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-4-இ)

# உஸ்பெகிஸ்தான் பெண்கள் பலவந்த பாலியல் தொழிலில்

கொழும்பு,ஜன.1

உஸ்பெகிஸ்தானிலிருந்து, இலங்கைக்கு அழைத்து வரப்படும் பெண்கள், பலவந்தமாக பாலியல் தொழிலுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் ஹொட்டல்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பில் பணியாற்றலாம் என்று ஏமாற்றி இவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர். கடத்தப்பட்ட பெண்கள் சிலரின் வழக்குகள் நீதிமன்றங்களில் உள்ளதால், பாதுகாப்புக் கோரி அவர்கள் இலங்கையில் தங்கியுள்ளனர். இவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கையில் மனிதக் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவால் வெளியிடப்பட்ட ஆள்கடத்தல் அறிக்கையில், இலங்கையில் மனிதக் கடத்தல், தரமிறக்கப்படும் அபாயத்தை நாடு எதிர்நோக்கும் மட்டத்தில் உள்ளது. இலங்கையில் நடக்கும் மனிதக்கடத்தல் விவகாரம் பற்றிய தகவல்களை அமெரிக்கா ஏற்கனவே கோரியுள்ளது.

இதேவேளை, 1985 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தில் திருத்தம் செய்வதற்கும், குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மேலும் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

# கால்நடைகளை மோதிய ரயிலுக்கு எஞ்ஜின் கோளாறு

## 5 கால்நடைகள் உயிரிழந்தன

கொடிகாமம், ஜன 1

கொழும்பிலிருந்து நேற்றுமுற்பகல் 11 மணிக்கு புறப்பட்ட உத்தரதேவி ரயில், முகமாலையில் மாடுகளை மோதியதால் 5க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன.

இந்த விபத்தின்போது, ரயில் எஞ்ஜின் கோளாறு (ஏயார் ஹோஸ் பைப் வெடிப்பு) ஏற்பட்டு போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது.

முகமாலை, எழுதுமட்டுவாழ், உசன் ஆகிய பகுதிகளில் உரிமையாளர்களால் கட்டாக்காலிகளாக விடப்படும் மாடுகள் அடிக்கடி ரயிலில் மோதுண்டு இறக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-159)



# வாழ்நாள் ஊடகவியலாளருக்கு வட்டுக்கோட்டையில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜன.1

உதயன் மற்றும் சஞ்சீவி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரும், வாழ்நாள் ஊடகவியலாளருமான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கானமயில்நாதனுக்கு, வட்டுக்கோட்டையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வட்டுக்கோட்டைஇந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில், அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-4-27)


## தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள எமது Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு கணிய அளவையிலாளர் (Q.S)Autocad தெரிந்தவர் விரும்பத்தக்கது. மற்றும் அலுவலக உதவியாளர் (A/L தகைமை) தேவை.

தொடர்புக்கு : 077 777 0969

Email : jenoshanark@gmail.com


# வட மாகாணத்தில் நூறு நூலகங்கள்

## சுரேன் ராகவன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்.ஜன.1

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரியூட்டப்பட்ட நினைவு நாளில், வடக்கு மாகாணத்தில் 100 நூலகங்களைச் செயற்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், தேசிய நூலகத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில், நூலகங்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் சிறந்த நூலகமாக சுன்னாகம் பிரதேச சபை நூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று புத்தக வாசிப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்க வேண்டிய கடமை பிரதேச நூலகங்களுக்கே உள்ளன. பிரதேச சபைகள் அதற்கான செயற்றிட்டங்களை முன்மொழிந்து செயலாற்றவேண்டும்.

2022 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் ஊடாக, 1 மில்லியன் ரூபாவை, வவுனியா நகரசபை நூலகத்தின் அபிவிருத்திக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றார். (ஒ-4-159)

# கலந்துரையாடல்

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில், 25 ஆவது நிகழ்வாக "ஒலி நூல்களின் இன்றியமையாமையும் அடுத்தகட்ட நகர்வுகளும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஒலி நூல் செயற்றிட்ட ஆலோசகர் சுபா பாலசுப்ரமணியத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஒலி நூல் செயற்றிட்டத்தின் பிரதம ஆலோசகருமான ரவீந்திரன் ஆறுமுகம் உரையை நிகழ்த்தவுள்ளார்.

கலந்துரையாடலில், சூம் செயலி இலக்கத்தின் இணைப்பு https://us02web.zoom.us/j/81415584070 ஊடாக அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி-1)


## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் 13 வருடங்கள் அதிபராக அளப்பரிய சேவையை ஆற்றி 01.01.2022 அன்று அகவை அறுபதில் மணிவிழாக் காணும் திருமிகு யோசேப்பு அன்ரனி தவநாயகம் (B.A., SPl.Trd, P.G.D.E, M.Ed.DSM) அவர்களை இம் மணிவிழா நாளில் வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சியாகவும், சுபீட்சமாகவும் அமைய மனமுவந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மணிவிழாக்குழு
யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்
புத்தூர். (ci36919) (2.6)


## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல் (வேல் மாஸ்டர்)

(ஓய்வுபெற்ற அதிபர் -புத்தூர்)

யாழ் புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல் அவர்கள் கடந்த (28.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காங்காதேவியின் அன்புக் கணவரும், செந்தாரா, ஞானேந்திரா, தனலோஜினி, குகசாங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவரத்தினராசாத்தி, நவரத்தினவேல், நவரத்தினராணி, நவராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விவேகானந்தர் மற்றும் பாஸ்கரதேவி, விபுலானந்தன், குமாரகுலசிங்கம், சிவராஜகோபால், ஜெயராணி, ஜெயந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 29.12.2021 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் வடக்கு கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனக் கிரியை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு, புத்தூர்.
0771766210

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

விவசாயம் என்பது வியாபாரம் அல்ல வாழ்க்கை முறை.!

- நம்மாழ்வார்




## ஒளிக்கீற்றுக்கான காத்திருப்பு!

பூமிப் பந்தின் சுழற்சியால் இன்று புதிய ஆண்டுக்குள் – 2022 க்குள் – நாம் பிரவேசிக்கின்றோம். புதிய ஆண்டு சிறப்பானதாக அமையவேண்டும் என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பு. கடந்து வந்த 2021 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு சொல்லிக்கொள்ளும்படியாக எதையும் தந்துவிட்டுச் செல்லவில்லை என்பது வேதனை. கொரோனாப் பெருந்தொற்றால் பூமி திணறிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிலிருந்து மீள்வதற்கான எத்தனங்கள் அனைத்தும் தோல்வியையே சந்தித்துள்ளன. ஆனாலும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல மீளெழுவதற்கான முயல்வுகளையும் மனிதகுலம் கைவிடவில்லை. கொரோனாப் பெருந்தொற்று பலரை நீண்டகால நோயாளிகள் ஆக்கியிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக உலகின் பொருளாதாரத்திலும் அது கண்மூடித்தனமாக கைவைத்துள்ளது.

நித்தமும் கடனால் நாட்டை நடத்தும் இலங்கை போன்ற ஒரு தேசம் இந்தப் பெருந்தொற்றால் மீள முடியாத பெரும் இக்கட்டுக்குள் சிக்கித் தவிக்கின்றது. பிறக்கின்ற புத்தாண்டில் பெரும் பொருளாதார நெருக்கடிகளையே இலங்கையர்கள் எதிர்கொள்ளப்போகின்றனர். விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவற்றால் தினமும் வேதனையை அனுபவிக்கவேண்டிய சூழலே மலரப்போகின்றது. எமது பாரம்பரிய விவசாய வாழ்க்கை முறையிலிருந்து இயந்திரமயமான வாழ்க்கைக்கு மாறியமையால், 1970ஆம் ஆண்டுகளில் சிறிமாவோ அரசின் மூடிய பொருளாதாரக் கொள்கையின்போது தப்பிப்பிழைத்தமை போன்று இப்போது மீண்டெழ முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் உலகப் பெருந்தொற்றான கொரோனாவால் மாத்திரமன்றி, இலங்கையின் அரச இயந்திரத்தாலும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். தமிழர் தாயகத்தில் கடந்து சென்ற ஆண்டு நிறைவேறிய ஆக்கிரமிப்புக்கள், அத்துமீறல்களைத் தொகுத்துப் பார்த்தால் போர் இன்றிய இனவழிப்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதை உணர முடியும். தாயக தேசத்தின் நிலத்தொடர்ச்சிகளைத் துண்டிப்பதற்கான எத்தனங்கள் முழு மூச்சாக எடுக்கப்பட்டு வருகின்றன.

நிரந்தர அரசியல் தீர்வு என்பது வெறும் வார்த்தைகளில் வடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதே தவிர நடைமுறைக்கு எட்டாத தூரத்திலேயே அது உள்ளது. இருப்பு கேள்விக்குறியாக்கப்படும் இந்தச் சூழலில், பொருளாதார ரீதியாகவும் தமிழர்கள் பெரும் துன்பத்தைச் சுமக்கவேண்டியுள்ளது.

இத்தகைய பெரும் இக்கட்டுக்குள்ளும் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்வோர் ஆளுக்கொரு திசையில் நவக்கிரகங்கள் போல நின்று இழுபட்டுக்கொண்டிருகின்றனர். தனிப்பட்ட 'ஈகோக்களை' முன்னிலைப்படுத்தி மக்கள் பிரச்சினைகளை மழுங்கடிக்கின்றனர். எதுவித நம்பிக்கையையும் விதைக்காத சூழ லில் தான் புதிய ஆண்டு பிறந்திருக்கின்றது.

மாற்றம் ஒன்றுதான் மாற்ற முடியாதது என்ற உலக நியதி இந்த ஆண்டாவது நிதர்சனமாக வேண்டும். உலகமக்களுக்கும், தமிழர்களுக்கும் பிறந்துள்ள புத்தாண்டாவது இருளை விலக்கி, ஒளியைப் பாய்ச்சி புத்துயிரைத் தரட்டும்.

# பதில் பிரதமர் தினேஷ்? ஜனவரி 8 இல் மாற்றம்!

**கொழும்பு, ஜன.1**

**இந்த மாதத்தின் ஆரம்பத்தில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுவது உறுதி என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஜனவரி 08, 10 மற்றும் 18 ஆகிய மூன்று தினங்களில் ஏதேனுமொரு தினத்தில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறும் எனவும், இதற்கான ஏற்பாடுகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது. முக்கியமான சில அமைச்சுப் பதவிகள் கைமாறப்படவுள்ளதுடன், ஒரு சிலருக்கு கூடுதல் பொறுப்புகள் கைய ளிக்கப்படவுள்ளதெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு மருத்துவத் தேவைகளின் நிமித்தம் ஓய்வு தேவைப்படுவதால், பதில் பிரதமர் ஒருவரையும் நியமிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது. பஸில் ராஜபக்ச இரட்டைக்குடியுரிமையை இன்னும் துறக்காததால், சமல் ராஜபக்ச அல்லது தினேஷ் குணவர்தன ஆகிய இருவரில் ஒருவர் பதில் பிரதமராக நியமிக்கப்படு வதற்கான சாத்தியமும் காணப்படுகின்றது. பஸிலுக்கு எதிர்ப்புகள் இல்லாவிட்டால் அவரே பதில் பிரதமர் பதவியை வகிப்பாரெனவும் கூறப்படுகின்றது. (எ-44)

## நட்டமடைந்த நிறுவனங்கள் தொடர்பில் விரைவில் முடிவு

கொழும்பு, ஜன.1

அடுத்த வருடம் முதல் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களை ஏற்படுத்தவும், பணிப்புறக்கணிப்பால் நட்டத்துக்கு முகங்கொடுத்த நிறுவனங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கவும் அரசு தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பால் நட்டத்துக்கு முகங்கொடுக்கும் நிறுவனங்களை அரசின் கீழ் வைத்திருப்பதா அல்லது அதை வேறு நிறுவனங்களுக்கு கையளிப்பதா என்பது தொடர்பில் இதன்போது தீர்மானிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கிழக்கு முனைய அபிவிருத்தியின் போது பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டு அதைத் தடுத்தனர். தற்போது அதனை அபிவிருத்தி செய்வதற்கு எந்தவொரு வெளிநாட்டு நிறுவனமும் முன்வராதுள்ளது. கூட்டுத் தீர்மானங்களுக்கு இணங்கவில்லை என்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதில் பிரச்சினை இல்லை என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (எ-இ)

# தீர்க்கமான முடிவுகளுக்காக திங்களன்று அமைச்சரவை!

2022ஆம் ஆண்டுக்கான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு அமைச்சர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் அமைச்சர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு நிலவிவருகின்றது. நாடவேண்டுமென ஒரு தரப்பும், நாடக்கூடாதென மற்றுமொரு தரப்பும் வலியுறுத்தி வருகின்றன. எனவே, இது தொடர்பில் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பதற்காக மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. (ம-44)

நாளை 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை மார்கழி 18

சுபநேரம் : மு.ப 09.30 - மு.ப 11.00
ராகுகாலம் : காலை 05.00 - காலை 6.30

சர்வதேச அறிவியல் புனைக்கதை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2022

# ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




வாழ்க்கையில் தொடர்ந்து எதிர்நீச்சல் போட்டுத் தாங்கள் நினைத்ததை அடையும் வழக்கம் உடைய கன்னி ராசி அன்பர்களே. இந்தப் புத்தாண்டு. தங்கள் ராசிக்கு மூன்றாம் வீட்டில் சந்திரன் சஞ்சரிக்கும் காலகட்டத்தில் பிறக்கிறது என்பதால் உங்களின் வாக்கு சாதுரியம் அதிகரிக்கும். அனைவரையும் உங்களின் கனிவான பேச்சால் கவர்வீர்கள். பண வரவில் இருந்த தடைகள் முற்றிலும் நீங்கும். சகோதர வகையில் இருந்த சிக்கல்கள் படிப்படியாகக் குறையும். கன்னிக்கு யோகாதிபதி சுக்கிரன் ஐந்தாம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால், மனதின் வலிமை அதிகரிக்கும். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்குவரும். முக்கியப் பிரமுகர்களோடு கைகுலுக்கி அறிமுகமாகும் வாய்ப்பு ஏற்படும். வீட்டில் இருந்த சிக்கல்கள் தீரும். அமைதியும் நிம்மதியும் திரும்பும். புதன்பகவானும் ஐந்தில் நிற்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் பெயர் புகழ் அதிகரிக்கும். மகன் அல்லது மகளின் போக்கு நல்லமுறையில் மாறும். அவர்களின் திறமை பளிச்சிடும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

குருபகவான் உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். இது உகந்த இடம் அல்ல. ஆரோக்கியத்தில் அக்கறை தேவைப்படும். மனதில் எப்போதும் ஒரு டென்ஷன் போராட்டம் இருந்துகொண்டே இருக்கும். திட்டமிட்டுச் செயற்பட்டாலும் எப்போதும் சிறு அலைச்சல் இருந்துகொண்டே இருக்கும் என்றாலும், எதிரிகளும் நண்பர்களாவார்கள்.

14.4.2022 அன்று குருபகவான் ராசிக்கு ஏழாம் இடத்தில் சஞ்சரிப்பதால் வாழ்வில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். சோர்வுகள் நீங்கி உற்சாகமாவீர்கள். எதிலும் கூடுதல் ஆர்வம் பிறக்கும். விட்டுப்போன வேலை வாய்ப்புகள் தேடிவரும். சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். புத்திர பாக்கியம் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அந்தப் பேறு கிடைக்கும். திருமணம் நிச்சயமாகும். வீடுகட்ட மனைவாங்க வங்கிக் கடனுதவி கிடைக்கும். தள்ளிப்போன வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும்.

ராகு கேதுவைப் பொறுத்த வரை கேதுபகவான் ஆண்டு தொடங்கும்போது 3 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். அதனால் பிதுர் ராஜ்ஜியச் சொத்துகளில் இருந்த சிக்கல்கள் நீங்கும். பங்குச் சந்தை மூலம் பணம் வரும். 9ஆம் இடத்தில் அமர்ந்திருக்கும் ராகுவால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

21.3.22 அன்று ராகு, கேது பெயர்ச்சிக்குப் பின் 2ல் கேதுவும், 8ல் ராகுவும் நுழைவதால் பேச்சில் கடுமை காட்டாதீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். நண்பர்களால் வீண் அலைச்சல், மன உளைச்சல் வரக்கூடும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வாகனத்தைக் கவனமாக இயக்குங்கள்.

சனிபகவான் ராசிக்கு 5ஆம் வீட்டில் இந்த ஆண்டு இறுதிவரை சஞ்சாரம் செய்வதால் பிள்ளைகள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் பேசுவார்கள். அவர்களின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு நிறைவேற்றப் பாருங்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு அவர்களைப் பிரியவேண்டிவரும். தாய்மாமன் வகையில் செலவுகளும், சின்னச் சின்ன மனஸ்தாபங்களும் வந்துபோகும். குலதெய்வக் கோவிலுக்கு மறக்காமல் சென்று வாருங்கள்.

தொழிலில் புதிய காற்று வீசும். பழைய இடத்திலிருந்து புதிய இடத்துக்கு வியாபாரத்தை மாற்றும் சந்தர்ப்பம் கனிந்துவரும்.

மறைந்துகிடந்த உங்கள் திறமைகள் வெளிப்படும். உங்களுக்கான உரிமைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் பகையை மறந்து இனி உங்களுக்கு உதவுவார்கள்.

இழுபறியாக இருந்த பதவியுயர்வு இப்போது கிடைக்கும். சம்பளம் கூடும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு உங்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவதாகவும், அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கி, சமூகத்தில் அந்தஸ்தைத் தருவதாகவும் அமையும்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 09 1956



இறப்பு 29 12 2021

### குணரட்ணம் வஸ்ரியாம்பிள்ளை

யாழ். பருத்தித்துறை முனையைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் வஸ்ரியாம்பிள்ளை அவர்கள் 29.12.2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்ரியாம்பிள்ளை - சந்தானா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி சாமிநாதர் - மாக்கிறேட் தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி லூட்ஸ் யசிந்தா (உதயம்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெகன், ஜெனி, பிறிந்தன், சிந்து ஆகியோரின் அன்புத் தந்தையும்,டெபி, மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஈத்தன், யோசுவா, ஆரியா, ஏடன் ஆகியோரின் அன்புப் பேரனும்,அன்ரன் மரியநாயகம், காலஞ்சென்ற அருட்சகோதரி மேரி நோபேட், லூவிஸ் செல்வராணி, லூவிஸ் செல்வமகள், காலஞ்சென்ற லலிதா, றொபேர்ட் தவராசா, காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி, சாந்தி, ஜெயக்குமார், சுகந்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
றொபேர்ட் தவராசா - சகோதரன் Mobile : +15145123323
மயூரன் சண்முகநாதன் - மருமகன் Mobile : +15146199240
சபேசன் - மருமகன்
Mobile : +15149451238

(Cr.36936) (2.6)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அல்பிறெட் ரவிராஜ்



பிறப்பு 06.10.1994



இறப்பு 01.01.2018



ஆண்டுகள் நான்கு ஆனதுவே ஆண்மகனே !
மாண்டு நீ விண்ணுற்று போய்
காற்றினிலே வந்தகாலன் உன்னை
இரக்கமேதுமின்றி அழைத்துச் சென்றானோ!
வாழ்வில் வசந்தம் வீசுமென்றிருக்கையிலே
பாசமலரொன்று பாதியிலே வாடியதே

ஈச்சமோட்டை. (cs.1274) (2.6) குடும்பத்தினர்

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கவலைகள் மறையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நிதி முன்னேற்றம் ஏற்படும். ஆரோக்கியம் பற்றிய கவலை தீரும். பெற்றோர் உடல்நலனில் இருந்த சிரமங்கள் குறையும்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உண்டாகும். தேவையின்றி யாரையும் பகைத்துக்கொள்ள வேண்டாம். குடும்பத்தில் புதிய உறவுகள் வர வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** கவலைகள் தீரும். சிலருக்கு காதல் உணர்வு அதிகரிக்கும். பேசும் போது கவனம் தேவை. முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பணியிடக் கவலை தீரும்.

**கடகம்:** வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.பெரியவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். கலகலப்பான நாள். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். அமைதியான நாள்.

**சிம்மம்:** கடந்த கால வருத்தங்களை நினைக்காமல் அவற்றை விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியான நாள். எதையும் ஆராயாமல் ஏற்க வேண்டாம். உறவுகளைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** யோகமான நாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிதி நிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். பகை பொன்று நட்பாகும். வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும்.

**துலாம்:** நேற்றிருந்த கவலை ஒன்று முற்றிலும் தீரும். நட்பு வளரும். வாக்கு வாதத்தால் தொல்லை வராதபடி கவனமாக இருங்கள். வீட்டில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சிகளை எடுப்பீர்கள். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருச்சிகம்:** பணியாளர்கள் பின் விளைவுகளை அறிந்து செயற்படுவது நல்லது. புதிதாக அறிமுகமாகும் நபர்களால் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியான நாள். உங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கும்..

**தனுசு:** நல்லவர்களை பகைத்துக் கொள்வது தப்பு என்பதை உணர்வீர்கள். நீங்கள் எண்ணிய விஷயங்கள் இன்று சிறப்பாக நடைபெறும். பொறுப்பு ஒன்றை நல்ல முறையில் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** குடும்ப விஷயங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மனநிம்மதி கூடும். குடும்ப சச்சரவில் அமைதி தேவை. நெருக்கமானவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** குழந்தைகளின் வாழ்வில் செழிப்பான மாற்றம் உண்டு. மற்றவர்களின் மனம் நோகக்கூடாது என்ற கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்டம் உங்களை திக்குமுக்காட வைக்கும். கலகலப்பான நாள்.

**மீனம்:** குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று இன்று நடக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சகோதரர்களின் மூலம் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் ஒருவரின் சிறப்பு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ அன்னையின் பாதுகாப்புடன் புத்தாண்டைத் தொடங்குங்கள்!

*யாழ்.ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை*



புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. தேவ அன்னையின் பாதுகாப்புடன் அனைவரும் இந்த ஆண்டைத் தொடங்குங்கள் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

2022ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை, இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகின்றேன்.

உலகக் கத்தோலிக்க திருச்சபையானது புதிய ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அன்றைய தினத்தில் ஆண்டு முழுவதுக்குமான அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும்; பெறவேண்டும்படி பணித்து நிற்கிறது.

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறைசித்தத்தை ஏற்று இறைவனின் தாயாகவும் இறை மக்களின் தாயாகவும் விளங்கி உலக மக்கள் அனைவரையும் பாதுகாத்துப் பாரமரித்து வருகின்றாள்.

கடந்த ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்றுவிட்டது. புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும், இனியதாய் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனங்களிலும் நிறையவே உண்டு. இந்தப் புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டைத் தொடங்குங்கள். ஆண்டு முழுவதிலும் தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும்; வேண்டித் தினமும் மன்றாடுங்கள்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து எந்தத் தீங்குமின்றி வழிநடத்தி எம் அனைத்துத் தேவைகளிலும் நிறைவு செய்ய இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்- என்றுள்ளது. (ம-60)

# தர்மம் நிலைக்கட்டும் பஞ்சம் நீங்கட்டும்!

*கலாநிதி ஆறு.திருமுருகன் வாழ்த்து*



இன்று எம் மண்ணில் போரில்லை. ஆனால் பொருளாதாரப் பலமிழந்து விட்டோம். நாளை என்னவாகுமோ என்று அச்சத்தோடு அனைவரும் வாழும் நிலை. எம்மண்ணில் தர்மம் நிலைக்கவேண்டும். பஞ்சமின்றி அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும் நீதியோடு அனைவரும் நிம்:மதியாக வாழவேண்டும். இவ்வேண்டுகோளை இந்நாளில் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். காலம் வேகமாக கடக்கின்றது. உலகம் நோய்களின் சீற்றத்தால் அல்லற்படுகிறது. விஞ்ஞானத்தின் விந்தைகள் ஆச்சரியத்தைத் தந்தபோதிலும் இயற்கையை எவராலும் வெல்லமுடியவில்லை. இயற்கையே இறைசக்தி. இறைவனை அனைவரும் எம்மைக் காத்தருளுமாறு வழிபாடு செய்யுங்கள். இந்த இனிய பிறப்பை நல்லவண்ணம் காத்து எமக்கும், பிறக்கும் நன்மைகளைத் தேடுவோமாக.

அழகான இலங்கைத் திருநாடு அறத்தைத் தொலைத்ததனால் அல்லல்களை அனுபவிக்கின்றது. என்று தர்மம் பிழைக்கின்றதோ அதன் பின் எல்லாம் பிழைத்துவிடும். இன்று எம் மண்ணில் போரில்லை. ஆனால் பொருளாதாரப் பலமிழந்துவிட்டோம். நாளை என்னவாகுமோ என்று அச்சத்தோடு அனைவரும் வாழும் நிலை. எம்மண்ணில் தர்மம் நிலைக்கவேண்டும். பஞ்சமின்றி அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும் நீதியோடு அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும். இவ்வேண்டுகோளை இந்நாளில் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம்.

'கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்' எனக் கம்பராமாயணம் கூறியது. இன்று இலங்கை கடன் தொல்லையில் கதிகலங்கி, அண்டை நாடுகளிடம் கையேந்திக் காத்திருக்கின்றது. இது நாட்டுக்கு மட்டுமல்ல எம் எல்லோருக்கும் பாடமாக அமைந்துள்ளது. நாடு நல்லாய் இருந்தால்த்தான் நாம் எல்லோரும் நல்லாய் இருக்கமுடியும். நாட்டுக்காக அனைவரும் பிரார்த்திப்போம். ஆடம்பரமான, அர்த்தமற்ற காரியங்களை நிறுத்துவோம். கடின உழைப்பினால் எம்மை நோக்கிவரும் இடர்களை வெல்வோம் - என்றுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

# உதயா ஜுவல்லர்ஸ்






- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.



Email-uthayaa Jewellerss@gmail.com
Facebook - uthayaa Jewellerss
T.P. No - 074 069 4449 / 021 222 4434

---

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

**ஏசியன் தளபாட நிலையத்தின் புதிய கிளை திறப்பு விழாவை முன்னிட்டு**

**புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு**

## Electronic & Furniture

### washing machine (innovex) 5year warranty



| | | | |
|---|---|---|---|
| Fully Automatic | (6 kg) | ~~52250~~/- | 40200/- |
| | (7 kg) | ~~61500~~/- | 45100/- |
| Semi Automatic | (6.5 kg) | ~~37500~~/- | 29500/- |

### Fridge (innovex) 10 year warranty



| | | | |
|---|---|---|---|
| Single Door | 180 Ltr | ~~61900~~/- | 44990/- |
| Double Door | 180 Ltr | ~~65900~~/- | 48150/- |
| | 240 Ltr | ~~70900~~/- | 52100/- |
| | 250 Ltr | ~~85900~~/- | 63900/- |
| Inverter | 250 Ltr | ~~97900~~/- | 69450/- |

### Television (innovex) 3 year warranty



| | | |
|---|---|---|
| 32 ``LED TV | ~~45900~~/- | 36150/- |
| 40" LED TV | ~~79900~~/- | 62950/- |

### Piyestra





Matters (Piyestra)

| | | |
|---|---|---|
| Single (D/L) 6 x 3 | ~~5400/-~~ | 3850/- |
| Double (D/L) 6 x 4 | ~~7050/-~~ | 4970/- |

**Plastic Verandah Chair (Piyestra)**
(6 Chair + Teapow) ~~10400~~/- 8100/-

**Sofa3 + 1 + 1 (warranty Rexin - 2years**
**Body - 10 Years** ~~60900~~ 49000/-

**Piyestra sofa's and Office Furnitures 15% Discount**
**Piyestra Bedroom Suits 12.5% Discount**

INNOVEX Piyestra Nilkamal Panasonic Hisense DAXER

114, Navalar Road,
Jaffna.

021 222 6898


(CR 36151) (3/6)

---

அனைவருக்கும் எமது இனிய புது வருட நல் வாழ்த்துக்கள்

# விக்கி லேணர்ஸ்
# Vikki Learners

**அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி பாடசாலை**






- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

**தலைமை காரியாலயம்**
136/1, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**கிளை**
இல.125/1, K.K.S. வீதி,
சுன்னாகம்.

அந்தோனியார் கோவிலடி,
மானிப்பாய்.

**T.P:077 830 8360 / 021 722 3201**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்சிமாட்டின் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

Happy new Year 2022







இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும்,
அதிகபட்ச உத்தரவாதத்துடனும், எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்,
24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.

**YARL SMART** *Water Solution (Pvt) Ltd.*
No.341 K.K.S Road, Jaffna.
Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.
021 430 0044 | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

Yarl Smart Water Solution

(CR36711)

Yarl Smart PARTY
"happy home, happy life"




SMART PARTY
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# நியூ நெல்சன் லேணர்ஸ்

# New Nelson LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற A தர முதன்மை சாரதி பயிற்சிப் பாடசாலை




இல. 89, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
021 222 4527, 077 790 6064, 077 358 1916
No. 89, Kandy Road, Chundukkuli, Jaffna.

கிளைகள் :
பிரதான வீதி, வல்வெட்டித்துறை 077 557 3711
சீரணி சந்தி, சண்டிலிப்பாய். 077 794 2312

(CR 26700) (3/6)

புத்தாண்டு தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# பௌத்த இந்து ஒற்றுமை

Co. Reg. GA 00236265

ஸ்ரீ நாக விஹாரா, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## ஒற்றுமையாக வாழ்வோம்



தானம் செய்யுங்கள்,
தொண்டராகுங்கள்,
சமூக ஊடகங்களில்
பகிருங்கள்

இந்து பௌத்த உறவு மிகவும் பழமையானது
பிரிக்க முடியாத சகோதர மதங்கள்.
ஒற்றுமை நடுநிலை பாதையை
உருவாக்கிறது ஒற்றுமையே நிரந்தர
சமாதானத்திற்கு ஒரே வழி.

சேர க. கணேசநாதன்
Tel : 021 221 0141
Whatsapp (SMS) 071 034 6722
UnitedBandH@gmail.com,
www. dharmaok.com

(CS 41918) (3/6)

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

50 வருடங்களுக்கு மேலாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான

# மைதிலி நகைமாடம்



தனியார் நிறுவனம்

## Maithily Nakai Maadam (Pvt) Ltd



HAPPY New Year




என்றும் மங்கிடா
தரம் குன்றிடா
தங்க நகைகளின்
சாம்ராஜ்யம்

யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்

89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902 79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து வாடிக்கையாளருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

யாழ் மண்ணின் பிரமாண்டமான தயாரிப்பில்
இல்லத்தரசிகளின் அரசன் V.S.P நல்லெண்ணெய்
V.S.P நல்லெண்ணெய்
SPECIAL GINGELLY FOOD OIL
சுத்தமான முறையில் உணவுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது
தாயின் அன்பைப்போல நம்பிக்கையானது V.S.P நல்லெண்ணெய்
போலிகளைக் கண்டு ஏமாறாமல் V.S.P நல்லெண்ணெய் வாங்கும் போது பரிமளா ஸ்ரோர்ஸ் எனும் பெயரைப் பார்த்து வாங்கவும், சந்தேகம் இருப்பின் எமது தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
உரிமையாளர் : திருமதி பாஸ்கரன்
குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் V.S.P நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் : பரிமளா ஸ்ரோர்ஸ்
முட்டாஸ் கடைச் சந்தி, K.K.S வீதி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 4135, 021 222 9165
(CR 36713) (3/6)
திருகோணமலையில் நியூ சிறி விநாயகர் சுப்பர் மார்க்கட் 160, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை T.P : 077 304 4462
மட்டக்களப்பு வாழ் மக்களின் நன்மை கருதி சண்முகா ஏஜென்சி 159, திருமலை வீதி, மட்டக்களப்பு H.L : 077 990 4636 T.P : 065 222 2139 065 222 5380
கொழும்பில் விற்பனையாளர் மகாராஜா பூட்சிற்றி 18/3, Dr.E.R.Cooray, Mawatha, Wellawatta, Colombo - 06 T.P : 011 236 0926, 011 465 4444
வவுனியாவில் விற்பனையாளர் சுகந்தன்ஸ் 13A. மன்னார் வீதி, வவுனியா T.P : 024 222 3348, 077 020 9495

# பொருளாதாரத்தை வலுப்படுத்த புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும்!

## ஜனாதிபதி வாழ்த்து



சவால்களைத் தொடர்வதற்கும் வெற்றி கொள்வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என நான் நம்புகிறேன் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

மலர்ந்துள்ள புத்தாண்டு, எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் பார்க்கத் தூண்டியிருக்கிறது. அதனால், 2022ஆம் ஆண்டை, மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வரவேற்போம்.

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தொற்றுப் பரவல் காரணமாக முடங்கியுள்ள பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன இதன் மூலம் பாதுகாக்கப்படும். அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் செயற்படுத்த எம்மால் முடியும். மக்களைப் பாதிப்படையச் செய்யும் அடிப்படையற்ற அரசியல் போராட்டங்கள், நாட்டை நேசிக்கின்ற பெரும்பான்மையான மக்களால் நிராகரிக்கப்பட்டு உள்ளமையானது, அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்துள்ளது. மலர்ந்துள்ள புத்தாண்டை, மக்களுக்கான 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணித்து, மாற்றத்துடன்கூடிய புத்தாண்டாக மாற்ற அணிதிரளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றுள்ளது. (ம)

# புத்தாண்டில் புதிய பாதை

## பிரதமர் மஹிந்த வாழ்த்து



நாம் நாட்டின் பிரச்சினைகளை விமர்சிப்பவர்கள் அல்லர். நடைமுறைச் சவால்களுக்கான தீர்வுகளை உங்களுக்கு வழங்குபவர்கள். அதற்காக நீங்கள் அனைவரும் எதிர்பார்க்கும் புதிய பாதை இன்று உதயமாகும் புத்தாண்டில் வெளிப்படுத்தப்படும் இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை அனுபவித்து, மிகுந்த வலிமையுடன் எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு உதயமாகியுள்ள இந்தப் புத்தாண்டில் உறுதிகொள்வோம்.

உலகளாவிய தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து கடந்த ஆண்டில் இலங்கை முகங்கொடுத்த சவால்கள் பலவாகும். சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான சவால்களை வெற்றி கொள்வதற்கு நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றிய அர்ப்பணிப்பை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

நாட்டில் இவ்வாறான எவ்வித சவால்களும் காணப்படாத காலப்பகுதியில் கைவிடப்பட்ட பல திட்டங்களை நாம் செயற்படுத்தி அவற்றை கடந்த காலங்களில் மக்களின் பயன்பாட்டுக்காக கையளித்துள்ளோம்.

தொற்று நிலைமைக்கு மத்தியிலும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் இடைநிறுத்தாது, மக்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்பி அபிவிருத்தி ஒளியை முழு நாட்டுக்குள் பரப்புவதே எமது அரசாங்கத்தின் எதிர்கால இலட்சியமாகும்.

அதற்காக சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக எம்மத்தியில் காணப்படும் பல்வேறு தடைகளை முறியடிக்க வேண்டும். ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக சரியானதை தெரிவுசெய்து அதற்காக செயற்படுவதன் ஊடாக தற்போது காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் - என்றுள்ளது. (ம)

# வெற்று வாழ்த்துக்களால் மக்களை அவமானப்படுத்த விரும்பவில்லை!

## சஜித் வெளிப்படை



மனச்சாட்சிக்கு இணங்க மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதைத் தவிர, இன்றுவரை அழுத்தங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு ஒரு போலியான விசித்திர உலகத்தைக் காட்டி வெற்று வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாவது இலங்கை மக்களை அவமானப்படுத்துவதாகவே அமையும் என நாங்கள் நம்புகிறோம் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சுமார் 15 ஆயிரம் குடிமக்கள் பலியாகிய கொரோனா பாதிப்புக்கு மத்தியில், புத்தாண்டின் முதல் நாளில் வழக்கம் போல் பால் பொங்கவோ, சமைக்கவோ, முடியாத அளவுக்கு பொருளாதாரம் வங்குரோத்தாகிவிட்டது. எந்நேரமும் எரிவாயு சிலிண்டர் வெடிக்குமோ என்ற பயத்தில் இல்லத்தரசிகள் சமயலறைக்கு தயங்கித் தயங்கிச் செல்ல வேண்டிய நிலையில் நாடு தனது கடைசி இருப்பைக் கூட இழந்து புதிய ஆண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டின் பெரும் கடனை அடைக்கவேண்டிய சூழ்நிலையில், குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி, கல்வி கேள்விக்குறியாகி, இளைஞர்கள் வேலையிழந்து விரக்தியில் வாடும் சூழலில், பசியால் அழும், ஊட்டச் சத்துக் குறைந்த, நிறை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவரும் சூழலில் வருங்காலத்தைப் பற்றி விவசாயிகள் பாழடைந்த வயல்களில் பெருமூச்சு விடும் வேளையில், தொழிலாளர் சமூகம் தனக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்ச சலுகைகளையும் இழந்து நிற்கும் இவ்வேளையில் நாம் புதிய ஆண்டை எதிர்கொள்கிறோம்.

அதிகாரத்தின் நிகழ்ச்சி நிரலை நம் கையில் வைத்துக்கொண்டு இந்த நெருக்கடியான சூழலை எதிர்கொள்ள முடியாது. ஆனால் இந்த சீரழிந்த சூழ்நிலையிலிருந்து கூட்டு முயற்சியின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

தேசிய பேரழிவு ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் குறுகிய அதிகார வெறிக்குப் பதிலாக தூய்மையான மக்கள் சார்பு வேலைத்திட்டத்தில் இறங்குமாறு இந்த நாட்டின் பிரஜைகளின் தலைமுறை என்ற வகையில் மீண்டும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ம)

# மலரட்டும் மனிதநேயம்

## வாழ்த்துரையில் மஸ்தான்



கஷ்டங்கள் நீங்கி துன்பங்கள் விலகி இனங்களுக்கிடையில் சமத்துவமிக்க ஆண்டாக இவ்வாண்டு மலரட்டும் என்று தன் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான காதர் மஸ்தான். அவர் அனுப்பியுள்ள வாழ்த்துரையில் மேலும் உள்ளதாவது:

அழிவுக்குள்ளும் ஆசிர்வாதமாய் இந்தக் கொரோனாப் பெருந்தொற்று கருணையையும் மனித நேயத்தையும் எம்மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளதை நாம் மறுதலித்துவிடமுடியாது.

உலகெலாம் பேரவலம் நிகழ்த்திய கொடிய போர்கள் எல்லாம் தற்பொழுது ஓய்வெடுத்துள்ளதுடன் மனித குலத்தின் ஆத்மாவின் பெறுமதியை உலகு தற்பொழுது உணரத் தலைப்பட்டுள்ளது.

எமது தாய் நாட்டு மக்களும் இன்று இந்த உணர்வுகளால் புடம்போடப்பட்டு வருவதை அண்மைக்கால இன ஐக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கட்டியம் கூறுகின்றன. மனித குலம் இன்று வேண்டிநிற்கும் அன்பு, கருணை, மனிதநேயம், சுகாதார வாழ்வு உள்ளிட்ட பாக்கியங்களை முழு மனிதமும் அனுபவித்திட அவாவி நிற்கிறேன் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் மிகப் பிரமாண்டமான புத்தம் புதிதாக அமைக்கப்பட்ட
3 மாடிகளைக் கொண்ட 3 திருமண மண்டபங்கள் மேலும்
தங்குமிட வசதிகள் (Rooms) Restaurant போன்றவையுடன்

# BRIGHT INN

## Luxury Holiday Resort

எமது Restaurant இல் நீங்கள் ஓடர் செய்யும் அனைத்து உணவு வகைகளையும் உடனுக்குடன் எமது தனித்துவமான அனுபவம் வாய்ந்த சமையல்கலை வல்லுனரின் (Chef) கைவண்ணத்தில் உணவு தயாரித்து கொடுக்கப்படும். அத்துடன் Catering Services செய்யப்படும்.

உங்கள் தேவைக்கேற்ற உணவுவகைகளை தயாரித்து உங்கள் வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும்.





No. 11, Sivan Road,
Thirunelveli.
Jaffna.

076 419 2934/ 021 222 1889,
077 798 3933 /
www. brightinnjaffna.com
brightinnjaffna@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்கான நம்பிக்கை புத்தாண்டில் பிறக்கட்டும்!



## மாவை வாழ்த்து

கிடைத்த சுதந்திரத்தையும் இழந்து, இராணுவ மயமான நிர்வாகத்துக்குள் உரிமைக்குரலுக்காகப் போராடும் மக்களாய் தமிழர்கள் வாழ்கின்றனர். இந்தப் புத்தாண்டிலாவது புதிய நம்பிக்கை எமக்குக் கிடைக்கட்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா. அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

2021ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து இன்று 2022ஆம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றோம். உலகம் இத்தனை வளர்ச்சியடைந்துள்ளது. வேற்று உலகக் கிரகங்களைக்கூட கால்பதித்துக் கண்டறிந்து செல்லும் அறிவியல் தொழில்நுட்பம் நிறைந்த விஞ்ஞானிகள் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் திரிபடைந்த ஒமிக்ரோன் வைரஸ் தற்போது துரிதமாகப் பரவி வருகின்றது.

2022ஆம் ஆண்டிலும் புதிய உலக ஒழுங்குகளில் பெரும் ஒழுங்கு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் வலிந்து வருகின்றன. அரசியல், போர்க் கொந்தளிப்புக்களும் இந்துமா சமுத்திரப் பிராந்தியம், தென் சீனக்கடல் பிராந்தியம், ஆசிய பசுபிக் சமுத்திரப் பிராந்தியங்களில் வல்லாண்மை ஆதிக்கப் போட்டிகளும் வலுப்பெற்றிருக்கின்றன. இப்படியொரு பின்னணியில்தான் நாம் புத்தாண்டை வரவேற்கின்றோம்.

இந்தப் புத்தாண்டானது அனைத்துக்கும் விடைதருகின்ற ஓர் அற்புதமான ஆண்டாக அமைய வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இறையருளை பிரார்த்திப்போம்- என்றுள்ளது. (ம)

# மங்கலமான வாழ்வு நிறைவாய் கிட்டட்டும்



இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இந்த நல்ல நாளில் எல்லோரும் சந்தோஷமாகவும் மன நிம்மதியுடனும் மங்கலம் நிறைந்த நல்ல வாழ்க்கையில் மகிழ்வுடன் இருக்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

இதுவரை காலமும் பட்ட துன்பங்களும் கொடிய துயரங்களும் உயிர்கொல்லிக் கொரோனாவும் அறவே இல்லாதொழிந்து, அனைத்து மக்களும் ஆனந்தமாகவும் உண்மையான, மங்கலகரமான, சுபீட்சம் வழங்கிடும் சிறப்புக்களுடன் மன மகிழ்ச்சியுடனும் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று முதல் ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சிறப்பாக வாழ்வதற்கு வழி பிறக்க வேண்டுமென்று மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பழையன கழிந்து புதியன புகுந்து மக்களை நன்னெறியில் வழிப்படுத்த எல்லாம் வல்ல இறைவனின் பரிபூரண திருவருள் கலந்த அருளாசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# நிம்மதியான வாழ்வுவாழ புத்தாண்டு வரம்தரட்டும்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாழ்த்து



தமிழர் தாயகமும், இலங்கைத் தீவும் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற ஓர் ஆண்டாக, தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் செவிசாய்க்கப்படுகின்ற ஓர் ஆண்டாக, வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மக்கள் நல்லமுறையில் கொண்டுசெல்லக்கூடிய ஓர் ஆண்டாக மலர்ந்திருக்கும் புத்தாண்டு அமைய வேண்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன். அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

2021ஆம் ஆண்டுக்கு நாம் விடைகொடுத்து அனுப்பியுள்ளோம். கொரோனாப் பெருந்தொற்று ஏற்படுத்திய மருத்துவச் சவால்கள், உயிரிழப்புக்கள், அரசின் முறையற்ற நடைமுறைக்குச் சாத்தியமில்லாத முடிவுகளால் வந்த பொருளாதாரப் பின்னடைவுகள், உணவுப் பற்றாக்குறைகள், அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையேற்றங்கள், அரசியல் சதியாட்டங்களால் ஏற்பட்ட இன விரிசல்கள் என்று அனைத்து விதத்திலும் ஏமாற்றம் மட்டுமே கடந்த ஆண்டில் எஞ்சி நிற்கின்றது.

ஓர் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அத்தனை செயற்பாடுகளும் அந்த ஆண்டு முடியும்போது முடிந்துவிடுவதில்லை. மழை விட்டாலும் தூவானம் தொடர்வதைப்போல் கடந்த ஆண்டின் தாக்கம் இந்த ஆண்டிலும் இருக்கத்தான் செய்யும். அதுதான் யதார்த்தம். ஆனால், 2021ஆம் ஆண்டிலும் பார்க்க 2020ஆம் ஆண்டே பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு கடந்த வருடம் மோசமாக அமைந்தது. அவ்வாறு இல்லாமல் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக ஒரு திருப்பமாக இந்த ஆண்டு அமைந்திடவேண்டும் என்பதுதான் என் பெருவிருப்பமாக உள்ளது. தமிழ் மக்கள் தமது அரசியல், பொருளாதார, கல்வி, கலாசார இருப்பை உறுதிப்படுத்தி நிம்மதியான வாழ்வு வாழ வாய்ப்பளிக்கும் ஆண்டாக இந்த ஆண்டு மலரட்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (ம)


அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு

0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com




கிளைக் காரியாலயங்கள்:

மல்லாகம் T.P: 021 224 3393, 070 301 3014, 077 343 6622

பண்டத்தரிப்பு T.P: 021 225 2333, 071 255 4135, 077 434 3798

சங்கானை T.P: 021 225 1664, 070 301 3016, 077 434 3149

சாவகச்சேரி T.P: 021 227 0616, 071 577 0616, 077 435 3995

யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004, 070 301 5004, 070 301 3017, 077 998 6247

நெல்லியடி T.P: 021 226 0999, 071 775 0999, 077 261 2446

புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001, 076 384 0684

காரைநகர் T.P: 021 225 2454, 070 910 2484

வேலணை : T.P: 021 221 5472, 070 301 3012

(CR 357709)




1960 ஆம் ஆண்டுமுதல் முன்னணியில் இயங்கும்

சாரங்கா நகை மாடம்

சாரங்கா நாணயமாற்று சேவை

அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று சேவை

WESTERN UNION MONEY TRANSFER

Ria MONEY TRANSFER

- வெளிநாட்டு நாணயங்களுக்கு கூடிய விலை வழங்கப்படும்.
- பழைய நகைகளுக்கு கூடிய விலை.

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2226972, 021 222 8869

நியூ சாரங்கா ஜூவலறி


இல.46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 0737

Hotline: 0773577212

(CR 35812) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவலைகள்



அன்பின் இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
பிறந்த மண்ணின் பெருமைதனை
எடுத்தியம்ப மலர்ந்த பூ
நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டது
ஓடவில்லை உம் நினைவுகள் இன்னும்
ஆலமரமாய் நீர் இருந்து
நவரத்தினங்கள் பெற்றெடுத்து
நெஞ்சார நேசித்து வளர்த்து
எம் மனங்களில் வாழ்கின்ற எங்கள் அப்பாவே
உம் பணியில் உம்மிடத்தே
பலபேரை ஒற்றிணைத்தாய்
பள்ளி மாணவர்கள் திறமைக்கும்
கதவுகள் திறந்து வைத்தாய்
சமயம் சார் விடயங்களில்
பற்றுடன் சேவை செய்தாய்
அரசியலிலும் கால்பதித்து
சமூகப் பணிகள் பல செய்தாய்
ஓவியமாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்து உம்மை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
ஆண்டவரின் காலடியில் உங்கள் ஆன்மா இளைப்பாற
தினமும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்

**பிரான்சிஸ் வின்சென் டீ போல்**
பிறப்பு 03.04.1938 இறப்பு 01.01.2021

றோஸ் கொட்
கடற்கரை வீதி,
முனை- பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 41940) (3/6)

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சண்முகலிங்கம் லதுர்ஜிகாந் (லது)

(உரிமையாளர் - வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)

மண்ணில்
16.08.1976

விண்ணகம்
14.01.2010

திதி:- சதுர்த்தசி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்டவரே!
உனைப் பிரிந்து நாம் - பன்னிரண்டு ஆண்டுகள்
கடந்து உளம் வருந்தும் வேளையில்
மீளாத்துயர் போக்க மீண்டும்
வருவாயோ எம் உயிரே!

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(cs.41939) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 • 07 • 1947



மறைவு
12 • 01 • 2021

அமரர் திருமதி **ஞானரஞ்சிதமலர் செல்வரட்ணம்**

திதி: சதுர்த்தசி

ஆலம் விழுது போல் ஆயிரம் உறவுகள் இருந்த போதும்
மூலவேராக எம் முன்னேற்றம் கருதி
தளம்பல் வரும் போதெல்லாம் தளும்பாது
கலக்கம் வரும் போதெல்லாம் கலங்காது
ஆதரவாய் உறுதுணையாய் வாழ்ந்த வாழ்வித்த எம் தாயே...!
ஒன்று என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவிலேயே நாம்வாழ்வோம்.

சோமராம் தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs.1250) (2.6)

# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

10.01.2022 - 31.12.2022 வரை சபைக்குச் சொந்தமான மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் -2022 ஏலத்தில் பங்கு பெற விரும்புவோர் 03.01.2022 திங்கட் கிழமை தொடக்கம் 07.01.2022 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணி வரையான காலப்பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வைப்புப் பணத்தினைச் செலுத்தி பற்றுச் சீட்டினைப்பெற்றுக்கொள்ளவும்.

**இடம்** :- சாவகச்சேரி பிரதேச சபை, தலைமைப்பணிமனை.

**காலம்** :- 07.01.2022 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி

| இல. | குத்தகை விபரம் | ஏலத்திற்கான ஆரம்ப கேள்வித் தொகை | வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|
| 1 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 808,600.00 | 8,100.00 |
| 2 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,139,700.00 | 11,400.00 |
| 3 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 14,200.00 | 500.00 |
| 4 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 01 | 17,300.00 | 500.00 |
| 5 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 02 | 19,600.00 | 500.00 |
| | வரணி உப அலுவலகம் | | |
| 6 | வரணி பொதுச்சந்தை | 60,900.00 | 700.00 |
| | கைதடி உப அலுவலகம் | | |
| 7 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 239,300.00 | 2,400.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | |
| 8 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 38,600.00 | 500.00 |
| 9 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 28,200.00 | 500.00 |
| 10 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 15,300.00 | 500.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | |
| 11 | நாவற்குழி பொதுச்சந்தை | 30,000.00 | 500.00 |


**நிபந்தனைகள்:-**

01. கேள்வி கோர விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டைப் பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
02. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் எவ்வித வரி அறவீடு களையும் மேற்கொள்ள முடியாது.
03. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
04. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் 1/3 பகுதியை உடனடியாக முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை பிரதேசசபையினால் வழங்கப்படும் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செலுத்துதல் வேண்டும்.
05. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளர் / செயலாளருக்கு உண்டு.
06. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஒப்பம்: க.வாமதேவன்**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**31.12.2021.**

(cr.36944) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
20.09.1934

மறைவு
30.12.2021

## திரு. சுப்பிரமணியம் கருணாகரன்

**(புங்குடுதீவு மணியம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் பத்தாம் வட்டாரத்தினை வதிவிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் கருணாகரன் (புங்குடுதீவு மணியம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) நேற்று முன்தினம் (30.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், சுகிர்தா, கலையரசி, முரளிதரன், நாவலன் (வேலணை பிரதேச சபை உறுப்பினர்), குணாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துவாரகாதரன் மற்றும் வேந்தன், கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான கருணாகடாட்சம், திருநாவுக்கரசு, கோபாலபிள்ளை, புவனேஸ்வரி, தியாகராஜா, வில்வரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, லீலாவதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான துரைச்சுவாமி, தர்மலிங்கம், ஞானமூர்த்தி, தாமோதரம்பிள்ளை, மற்றும் பராசக்தி, சற்குணம், ராஜேஸ்வரி, மணிமேகலை, பானுமதி, சற்குணம், சத்தியபாமா, இராமச்சந்திரன், நகுலேஸ்வரன், உலகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், ஆசினி, ஹரினி, எழினி, தமிழ் நிலவன், தமிழ் எழிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**நாவலன்**
**077 716 8755**
**குணாளன்**
**077 894 5856**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**கண்ணகை அம்மன் கோயில் வீதி**
**பத்தாம் வட்டாரம், புங்குடுதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ்-முஸ்லிம்....

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் நேற்றுத் தெரிவித்ததாவது:

"தேசிய இனப்பிரச்சினையால் சிங்கள மக்களைவிட வடக்கு, கிழக்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் அதிகளவில் பாதிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்-முஸ்லிம்களுக்கிடையில் திட்ட மிட்ட வகையில் இன முறுகலை ஏற்ப டுத்தி சிங்களக் கடும்போக்குவாதிகள் நாட்டின் அரசியலை முன்னெடுத்த கடந்தகால வரலாற்றை நாம் மறந்திட லாகாது.

தமிழ், முஸ்லிம் மக்கள் இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட் டவர்கள். அதனால்தான் நாம் இரு இனத்தவர்களையும் தமிழ்பேசும் மக் கள் என்று அழைக்கின்றோம். அதே போல்தான் வடக்கு-கிழக்கைத் தமிழ்பே சும் மக்களின் தாயகம் என்று இலங்கை அரசிடமும் சர்வதேச சமூகத்திடமும் வலியுறுத்தி வருகின்றோம்.

எனவே, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவையாகும். குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் -முஸ் லிம் மக்கள் கடந்தகாலத் துன்பியல் நிகழ்வுகளை மறந்துவிட்டு தீர்வை வென்றெடுக்க ஓரணியில் பயணிக்க வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்து முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்"-என்றார். (த-22)

### போதையில் பணி....

கடமையில் இருந்துள்ளார் என்ற குற் றத்துக்காக பணியிடை நீக்கம் செய்யப் பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. காங் கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தி யட்சகருக்கு வழங்கப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட் டது. சில நாள்களுக்கு முன்னர், கொடி காமம் பொலிஸார் இருவர், இதே குற் றத்துக்காகப் பணியிடை நீக்கம் செய் யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக் கது. (த-27)

### வடக்கு,....

கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் மீண்டும் இணைக்க முடியாது. இதற்கு முஸ்லிம் மக்கள் அனுமதி வழங்கமாட் டார்கள்."

- இவ்வாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாய கமோ அல்லது முஸ்லிம்களின் தாய கமோ அல்ல. இரு மாகாணங்களும் இலங்கை எனும் நாட்டுக்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே, மாகாணங் களைப் பிரித்து எந்த இனத்தவர்களும் சொந்தம் கொண்டாட முடியாது. அனைவரும் ஒரேநாட்டுப்பிள்ளைகள். சகலரும் இலங்கையர்கள் என்ற நாமத் துடன் இங்கு வாழ வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அன்று இணைந்திருந்தபடியால்தான் இனக்க லவரம் வெடிக்க ஆரம்பித்தது. வன்மு றைகள் தாண்டவமாடத் தொடங்கின. இந்த இரு மாகாணங்களையும் முன் வைத்துத்தான் 'தமிழீழம்' என்ற கனவு டன் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஏந்திப் போராடினர். இதனால் நாடெங் கும் குருதி ஆறு ஓடியது. வடக்கிலி ருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டார்கள். கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வுகளைத் தமிழ்க் கட்சி கள் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும்" -என்றார். (த-22)

### ராஜபக்சக்களை...

பக்ச குடும்ப அரசை வீட்டுக்கு விரட்டிய டிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்" -என்று, எதிர்க்கட்சித் தலை வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலை வருமான சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்தா வது:

"இந்த அரசின் சர்வாதிகார ஆட்சியால் நாட்டு மக்கள் இன்று வறுமையின் பிடி யில் சிக்கித் தவிர்க்கின்றனர். எத்த னையோ வலிகளையும், வேதனைக ளையும், கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு புதிய ஆண்டில் மக்கள் காலடி எடுத்து வைக்கின்றனர்.

கொடுங்கோல் ஆட்சி நடத்தும் ராஜபக் சக்களின் குடும்ப அரசுக்கு முடிவு கட் டும் ஆண்டாக இந்த வருடம் அமைய வேண்டும்.

இந்த அரசு ஆட்சியில் நீடித்தால் பட்டி னியால் மக்கள் நாள்தோறும் செத்தும டியும் நிலைமை ஏற்படும். எனவே, இந்த அரசை இந்தப் புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே வீட்டுக்கு விரட்டி யடிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்"-என்றார். (த-22)

### இந்தியா...

சா், இரண்டு நாடுகளினதும் வெளிவி வகார அமைச்சர்களுடன் பேச்சை ஆரம்பித்துள்ளார் என்று, ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

அரிசி, பெரிய வெங்காயம் மற்றும் உரு ளைக்கிழங்கு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களை இந்தியா மற் றும் பாகிஸ்தானிடமிருந்து இலங்கை கொள்வனவு செய்துவரும் நிலையில், மேலும் சில அத்தியாவசிய பொருள்க ளின் கொள்வனவுக்காக இவ்வாறு கடன் கோரியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-இ)

### இந்திய...

தில் ஒன்றுகூடிய மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிரா கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களை கைதுசெய், கைது செய்கின்ற படகு களை அரசுடைமையாக்கு,..." என் பன போன்ற கோஷங்களை எழுப்பிய வாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர். கொட்டும் மழையிலும் கடற்றொ ழிலாளர்கள் இந்த போராட்டத்தில் ஈடு பட்டிருந்தனர். (த-27)

### வெங்காயம்...

றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றுக் கான வரியை 30 ரூபாவால் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு நிதி அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது. சந்தையில் தற்போது அதிக விலையில் விற்பனை செய்யப்படும் உருளை கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றை இன்று தொடக்கம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (த-இ)

### யாழ்ப்பாண...

பில் யாழ் போதனா மருத்துவமனைக் குத் தகவல் வழங்கப்பட்டது. அதனை யடுத்து, சடலம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அவர் இன் னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-125)

### சம்பள...

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நீண்டகால பிரச்சினையாகக் காணப்பட்ட சம்பள முரண்பாட்டை, பகு திபகுதியாகத் தீர்ப்போம் என அரசு கூறியிருந்தது. ஆனால், இன்றுவரை அது தொடர்பான வர்த்தமானியை வெளியிடவில்லை.

அரசு கூறியது போன்று ஜனவரி மாதம் 20ஆம் திகதி மூன்றில் ஒரு பங்கு சம் பள முரண்பாடு தீர்க்கப்பட வேண்டுமா னால், ஜனவரி 5ஆம் திகதி அதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டும். இன்றுவரை குறித்த செயற்பாடு நடை பெறவில்லை.

24 வருடங்களாக நாம் ஏமாற்றப்பட் டுள்ளோம். இந்தமுறை தாம் வழங்கிய வாக்குறுதியை சம்பள அதிகரிப்பில் காட்டவில்லை என்றால், நாம் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடு வோம்.

அரசு தற்போது தேவையில்லாமல், சொந்த ஆடம்பரத்துக்காக செலவ ழித்து வருகிறது. பொருளாதாரக் கொள்கை இல்லாமல்தான் நாடு இப் போது பாதாளத்தை நோக்கிச் செல்கி றது. அதேவேளை, படித்தவர்களை முக்கிய பதவிகளில் அமர்த்தாமல், இராணுவத்தை அரச நிர்வாகக் கட்ட மைப்பில் கொண்டு வந்துள்ளமை யால் நாடு இராணுவ ஆட்சிக்குள் சென்றுள்ளது.

அரசு, தங்களுடைய விடயங்களை மூடிமறைப்பதற்காக மக்களைத் துன் பத்தில் தள்ளியுள்ளது.

மாதம் 35 ஆயிரம் ரூபாவை வைத் துக்கொண்டு நாம் என்ன செய்ய முடி யும்? ஆனால், அரசும் அரசு சார்ந்தவர் களும் சுகபோக வாழ்க்கை வாழ்கின்ற னர் -என்றார். (த-20)

### கோத்தாவுக்கு...

பயணிக்கும் போது 'கூ' எனச் சத்தமிட்டு கிண்டல் செய்துள்ளனர் என்று செய்தி கள் வெளியாகியுள்ளன.

அதனையடுத்து, அந்த வர்த்தக நிலை யத்தை பொலிஸார், பலவந்தமாக பூட்டுப்போட்டு மூடிவிட்டனர் என்றும் பரவலாக செய்திகள் வெளியாகியி ருந்தன.

இந்நிலையில், அவ்வாறு எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லையென வும், அந்தச்செய்தி முழுமையாகப் பொய்யானது எனவும் இலங்கை பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மிரிஹானவில் பால்மா கொள்வனவு செய்வதற்காக நின்றி ருந்த வரிசை தொடர்பில் தேடியறியுங் களென ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-இ)

### யாழை...

தைச் சேர்ந்த 3 பேர், நீரில் அடித்துச் செல்லப்பட்டநிலையில், அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு சகோதரிகளும், உறவினரான பெண் ஒருவருமே நீரில் அடித்துச் செல்லப்பட் டுள்ளனர். 14, 16, 29 வயதானவர் களே காணாமல் போயிருந்தநிலை யில், 16 வயதுச் சிறுமி, சடலமாக மீட் கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் வத்தளையிலுள்ள உறவினர் வீட்டுக்குச்சென்ற குடும்பத்தி னர், உறவினர்களுடன் தும்மோதர நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச்சென்றுள் ளனர். திடீர் மழையால் அருவியில் நீர் வரத்து அதிகரித்து அவர்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டது. (த-இ)

## முத்தரப்புச் சந்திப்பு இன்றும் நாளையும் தொடரும்

கொழும்பு, ஜன. 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட் டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளுக்கிடையேயான சந்திப்பு இன்றும், நாளையும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

அதில், கூட்டமைப்பின் சார்பில், சம்பந்தன், சுமந்திரன், புளொட் சித்தார்த்தன், ரெலோவின் செல்வம் அடைக் கலநாதன் ஆகியோரும், தமிழ் முற்போக்குக் கூட் டணி சார்பில் மனோ கணேசனும், முஸ்லிம் காங்கி ரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சந்திப்பின்போது, இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப் படவுள்ள புதிய ஆவணம் பற்றியும், மலையகத் தமிழ் மக்களுடனான ஒற்றுமை, தமிழ் பேசும் மக்கள் எதிர் பார்க்கும் அரசியல் தீர்வுத் திட்டம் என்பன தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

"சந்திப்பு ஆக்கபூர்வமானதாக இருந்தது. இந்தச் சந் திப்பு, இன்றும் நாளையும் தொடரும். சந்திப்பு திருப்தி யாக அமையும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இன்றைய (நேற்றைய) சந்திப்பில் முடிவு எதுவும் எடுக் கப்படவில்லை" என, இரா. சம்பந்தன் உதயனுக்குத் தெரிவித்தார். (த-22)

## 10 குத்தரிசி மூடைகள் கடை உடைத்துத் திருட்டு

### அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 1

அச்சுவேலி மேற்கில், வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு, பத்து மூடை குத்தரிசி திருடப்பட்டுள்ளது என்று, அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்

பருத்தித்துறை பிரதான வீதியில் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்திலேயே நேற் றுமுன்தினம் இந்தத்திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை மேற்கொள்ளப்படு கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு.இக்னேசியஸ் அன்ரன்

(முன்னாள் ஊழியர் இலங்கை மரக்கூட்டுத்தாபனம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இக்னேசியஸ் அன்ரன் நேற்று (31.12.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இக்னேசியஸ் - மேரி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் அரியமலர் தம்பதியரின் மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், குமுதினி, டிக்சன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - வேலணை பிரதேச சபை), டிலானி (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கேர்மிளா, மியோமி, பொலின் மற்றும் ஜீவா (Hardwaer யாழ்ப்பாணம்), பீட்டர் (கொழும்பு), சேகர் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராசா (TTL Company), யாழினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்), சரவணா ஆகியோரின் மாமனாரும், திலக்ஷன், சஹானா, ஷரண்யா, ஷங்கவி பவதாரணி, வர்னேஷ், லதுகேசன், ஆரணி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாளையாடி வீதி,**
**திருநெல்வேலி.**
**077 228 4235 (மகன்)**
**077 136 8187 (மகள்)**

(cs.41942) (2.6)

தகவல்:
**குடும்பத்தினர்**

# இடமாற்றம்

கொக்குவில் கஜன் மண்டபத்திற்கு அருகாமையில் இயங்கி வந்த ஆட்டிறைச்சிக் கடையின் உரிமையாளர் நல்லையா உதயகுமார் (பெரியதம்பி 2022.01.01 அன்று கொக்குவில் சந்தைக்கு இடமாற்றவுள்ளார் என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றார்.

(CS 1275) (2.6)

**077 085 6479**

## 78 ஆவது பிறந்த நாளும் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலியும்

கல்வயல்

## வே.குமாரசாமி



பூமியை விட்டு மறைந்தாலும்
எங்கள் மனங்களில் என்றும்
நிறைந்திருப்பீர் ஐயா

மனைவி, மக்கள், பெறாமக்கள்.
பெரிய அரசடி, சாவகச்சேரி.

தோற்றம் 01.01.1944 — மறைவு 10.12.2016

சாயராம

## 79 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## ஆறுமுகம் இராஜகோபால்

**(செம்பியன் செல்வன்)**

**(எழுத்தாளர்)**



மலர்வு 01.01.1943 — உதிர்வு 20.05.2005

கால மாற்றங்கள் உயிர் இனத்திற்கு
இன்பத்தையும் துன்பத்தையும் தரும்
மனித இனத்திற்கு இன்பம் மகிழச்சியையும்
எழுச்சியையும் தரும்
மனித மனதிற்கு பிரிவு துன்பங்கள்
உடலை நடைப்பிணமாக்கிவிடும்
உங்கள் நினைவால் உயிர்வாழும்

10 புதுவீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(CS 1276) (3.6)

இ.ராகுலன்
இ.புவனம்,

# வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் வாடகைக்குண்டு. 1750 = முதல் ஹொட்டல் விழா (ராமகிஷ்ணா பெற்றோல் செட் அருகில்)

**076 480 6077, 077 796 7878**

# உடனடி வேலை வாய்ப்பு

யாழ். மானிப்பாய் வீதியில் கொம்பியூட்டர் ரைப்பிங், புக் வைன்ரிங்கில் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் பழக ஆர்வமுள்ளவர்கள் தேவை

(CS 1287)(3.6)

**077392 0797**

# கல்வியாண்டு - 2022

தேசிய ரீதியாக தமிழ்மொழி மூல மாணவர்களை ஒன்றிணைத்து

**Zoom வகுப்புகள்**

**தமிழ் மொழியும் இலக்கியமும்**

**தரம் 08 - 11**

**ஆசிரியர் : ஏ. கஜன்**

(CR 36941)(3.6)

**077 240 0707**

# உடனடி வேலை வாய்ப்பு

யாழ். நகர் நல்லூரடியை அண்மித்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு முழுநேர, பகுதி நேர பணியாளர்கள் தேவை. மேலாளர், அறை உதவியாளர் ஆண் / பெண் துப்பரவு பணியாளர் தலா ஒருவர் தேவை. கீழ்க்காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

(CS41946)(3.6)

**076 419 6187**

# பெயர் மாற்றம்

5ஆம் வட்டாரம், புங்குடுதீவில்வதியும் **சிவசுப்பிரமணியம் கனகம்மா** ஆகிய நான் எனது பெயரை **சிவசுப்பிரமணியம் பராசக்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சிவசுப்பிரமணியம் பராசக்தி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 41928) (3/6)

**சிவசுப்பிரமணியம் பராசக்தி**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.12.2021 வியாழக் கிழமை அன்று இறைபதம் அடைந்த

அமரர்

## ஐயம்பிள்ளை ஐயாத்துரை

அவர்களின் 31ஆம் நாள்



கடந்த 17.11.2021 புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்த

அமரர்

## ஐயாத்துரை குணசீலன்

அவர்களின் 46ஆம் நாள்

பாரோங்க மூலவித்தாயிருந்து - எமை
சீரோங்க ஆலவிருட்சமாக்கி
காரோங்க காலனுனையழைக்க
ஊரேங்கி ஞாலம் பரிதவிக்க
எமை விட்டுச் சென்றதென்ன ஐயாவே.

சோதனைகள் வந்திட்டாலும்
வேதனைகள் வந்திட்டாலும் - அவற்றை
போதனைகளாயேற்று நின்று - சாதனைகள்
படைத்து எமை மகிழ வைத்திருக்க
நாதனுன்னை அழைத்து சென்றதென்ன
குன்றாத குணகுலவிளக்கு

அன்னார்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.01.2022) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இருவரின் ஆத்மாக்களும் ஆலடிக்கந்தன் பாதாரவிந்தங்களில் சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.**

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**குடும்பத்தினர்**

**077 071 1527, 077 330 1121, 077 641 3085**


**மீசாலை வடக்கு,**
**இராமாவில், கொடிகாமம்.**

(CR 36942) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி தரும் ஆண்டாக புதுவருடம் அமையட்டும்

## மன்னார் ஆயர் வாழ்த்து



மன்னார், ஜன. 1

புதிய வருடம், நம் அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் ஆண்டாக அமைய வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார். அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் 2021ஆம் ஆண்டைக் கடந்து புதிய ஆண்டில் கால் பதித்துள்ளோம். இந்தப் புத்தாண்டில் உங்களுக்கு இறை ஆசீர் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியுடனும், மற்றவர்களுடன் நல்ல உறவுடனும், அன்புடனும் வாழ உங்கள் அனைவருக்கும் இனிய புதுவருட நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (து-56)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

ஏழாலை பகுதியில் 15 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 24 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-25)

# 41 கிலோ மஞ்சளுடன் மன்னாரில் இருவர் கைது

மன்னார், ஜன. 1

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 41 கிலோ கிராம் மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார்நறுவிலிக்குளம் பகுதியில் வைத்து, வங்காலை பகுதியைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-இ)

# பட்டத்திருவிழாவில் பங்கேற்க அமைச்சர் நாமலுக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

வல்வையில் நடைபெறவுள்ள பட்டத் திருவிழாவுக்கு, அமைச்சர் நாமல் ராஜபக்ச கலந்துகொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜேர்மனியை தளமாகக் கொண்டு இயங்கும் 'வல்வை ஒன்றியம்' இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்து, கண்டனமும் வெளியிட்டுள்ளது.

அதில், தமிழின அழிப்பை நடத்தியும் தமிழர்களின் பூர்வாங்க நிலங்களை பறித்தெடுத்தும் எண்ணில் கணக்கற்ற தமிழர்களை பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரில் சிறையில் அடைத்தும் அடக்குமுறை ஆட்சிநடத்தி வருகின்ற இலங்கை அரசின் அமைச்சரும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகனுமாகிய நாமல் ராஜபக்சவையும் இன அழிப்பு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களையும் பட்டத் திருவிழாவுக்கு அழைப்பதானது எமது இனத்துக்கு இழைக்கும் வரலாற்றுத் தவறாகும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-27)

வாடகைக்கு

யாழ். பலாலி வீதியில், ஆரியகுளம் சந்திக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் பெரிய வீடு பகுதியாகவோ / தேவைக்கேற்பவோ வாடகைக்கு உள்ளது சிறிய அலுவலகங்கள், கல்வி களஞ்சிய நடவடிக்கைகளுக்கு உகந்தது. (CS 41943)(3.6)

077 517 9106, 076 924 9851




குடும்பம் ஒன்றுக்கு 35-55 வயதுக்கு இடைப்பட்ட வாகன சாரதி தேவை.

தங்கி நின்று வேலை செய்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0714115000

## கொரோனாவால் தென்மராட்சியில் ஒருவர் சாவு

நீண்ட நாள்களின் பின்னர், தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. நுணாவில் பகுதியில் தனிமைப்படுத்தலிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்த முதியவரே கடந்த புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால், உயிரிழந்தவரின் உறவினர்கள் சடலத்தை நேற்று தகனம் செய்ய ஏற்பாடுகள் மேற்கொண்டனர். இந்தநிலையில், அங்குசென்ற சுகாதாரப் பகுதியினர், சடலத்தில் பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்து சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. உரிய சுகாதார முறைப்படி. சடலம் தகனம் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (த-9)

# புது நம்பிக்கை தரவரும் புத்தாண்டை வரவேற்போம்



கழிந்து போன வருடமான 2021 எமக்களித்த அல்லல்கள் சொல்லும் தரமன்று. கொரோனா பெருந்தொற்று ஒமிக்ரோன் வரை வளர்ந்தது மட்டுமல்லாது உலகையே மீண்டும் ஓர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது.

எம் நாட்டில் பாதுகாப்பற்ற சமையல் அறை, நுகர் பொருள்களின் கட்டுக்கடங்கா விலையேற்றம், பலத்த பொருள் தட்டுப்பாடு, இறக்குமதி நிறுத்தம், பயிர்செழிக்க உரமின்மை, துறைமுகத்துக்கு வந்துள்ள கொள்கலன்களை விடுவிக்க டொலர் இருப்பின்மை போன்ற பெருந்துயரங்கள் பிறக்கப்போகும் புத்தாண்டிலாவது இல்லாமல் போகுமா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் 2022ஆம் ஆண்டை வரவேற்றுள்ள மக்களுக்கு புத்தாண்டு புதிய நம்பிக்கைகளைத் தர வேண்டும் என்று வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இந்தப் புதுவருடத்திலாவது மக்களின் கஷ்டங்கள் தீர்ந்து இயல்பு நிலை திரும்பவேண்டுமென்பது எமது வேணவா. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவுறவும் உரியதான உரிமைகள் எமக்குக் கிடைக்கவும் அயல்மொழியாரின் அச்சுறுத்தல்கள், நில அபகரிப்புக்கள் நீங்கி மக்கள் தம் பூமியில் நிம்மதியாகவும் தாம் விரும்பும் வாழ்க்கையை விருப்பொடு வாழவும் வழி ஏற்படுத்திக்கொடுக்கவரும் நம்பிக்கையான ஆண்டாக இந்த ஆண்டு அமையவேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைத்து வரவேற்கத் தயாராவோம்.

ஆனந்தப் புத்தாண்டே வருக! அனைவக்கும் புது நம்பிக்கை தருக!

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,
*பிரதம குரு,*
*வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்*

விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 076 283 2397

இடம் மாற்றம்

No.162, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி தற்போது No. 120A, கஸ்தூரியார் வீதியில் (மாநகர சபை கட்டடத் தொகுதியில்) 01.01.2022 சனிக்கிழமையில் இருந்து இயங்கி வருகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி
077 703 8772, 021 222 9440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.